"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் : 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

மலர் 87 | யாழ்ப்பாணம் 1962-ம் ஆ ஆனிமீ 10-ம் வ ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | இதழ் 23

### உங்கள் பத்திரிகை

தமிழ்ப்பேசும் கத்தோலிக்க சகோதர சகோதரிகளே! 'காவலன்' உங்களுடைய பத்திரிகை. இதனை ஆதரியுங்கள். இதில் வெளியாகும் அம்சங்களில் உங்கட்கு விருப்பமானவை எவை? எந்த அம்சங்களைத் தவிர்க்கவேண்டும்? புதிதாகச் சேர்க்கக்கூடியவை யாவை? என்பவை பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவியுங்கள். காவலனில் பிரசுரிக்க கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் முதலியன எம்மால் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படும். சுருக்கமாகவும், எளிதிலே விளங்கத்தக்க நடையிலும் எழுதி அனுப்புங்கள்.

ஆசிரியர்

# இருதயங்களின் பிரகாசமே எழுந்தருளிவாரும்

## "நான் போவேனாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன்"

## "சத்திய இஸ்பிரீத்துசாந்து வரும்போது சகல சத்தியத்தையும் உங்களுக்குப் படிப்பிப்பார்"

**இஸ்பிரீத்துசாந்துவானவர் பரிசுத்த பரமதிரித்துவத்தின் மூன்றாம் ஆளாகிய சருவேசுரன். அவர் பிதா, சுதன் என்பவர்களின் அன்பின் பந்தனம். உண்மையின் பிறப்பிடம், பரிசுத்ததனத்தின் வாய்க்கால். திடசித்தத்தின் கருவூலம். திருச்சபையின் ஆன்மா. அன்னாரிடம் எம்மை அர்ச்சித்து அருள்வழங்கிக் காப்பவரும் அவரே. அவர் மூலமாய் உலகு ஒரு குடும்பமாகப் பிரார்த்திப்போம்.**

கன்னிமரிவயிற்றில் தேவதிருச்சுதன் கர்ப்பந்தரித்து மனுவாவானார். சிலுவைமரத்திற் சிவபலியானார். மண்ணுலகமக்களை மீட்டுஇரட்சித்தார். அந்த மீட்பின் பரிசு மக்களின் நித்திய ஈடேற்றமாய் அமைந்தது.

தேவதிருச்சுதனார் மீட்பின் அலுவலைத் தாமே பூரணமாக நிறைவேற்ற விரும்பினாரில்லை. அவரைப் பூலோகத்துக்குத்தந்த பரலோக பிதாவின் திருவுளமும் அதுவாக இருக்கவில்லை. மீட்பின் பூரணத்துவத்தை உருவாக்கும் பொறுப்பு—அர்ச்சிப்பின் தொழில் — திவ்விய இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுடையதாயிருந்தது. அதனாலேயே **"நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கின்றது; ஏனெனில் நான் போகாதிருந்தால் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன். சத்திய இஸ்பிரீத்துசாந்துவானவர் வரும்போது சகலசத்தியங்களையும்உங்களுக்குப் படிப்பிப்பார்"** என்று யேசுக்கிறிஸ்துநாதர் தமது சீடர்களிடம் கூறினார்.

மீட்பின் பலன்களும், திருச்சபையின் ஒற்றுமையும் சிறந்த முறையில் நிறைவுபெறச் செய்யும் தனியொளி வழியாகத் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் இலங்குகிறார்என்பது இதனாற் புலனாகின்றது.

அக்கினி நாக்குமயமாய் அவர் அப்போஸ்தலர்கள்மீது இறங்கினார். அறிவீனத்திலும், அச்சத்திலும்அழுந்தியிருந்திருந்தஅவர்கள் உள்ளங்களில் பரலோக பொன்னொளி வீசியது. உறுதியும், உற்சாகமும் பொங்கின. மகாஞானிகளாக அவர்கள் மாறினார்கள்.

இடறல்பட்டிருந்த அவர்களுக்குத் தெளிவுண்டானது. மீட்பரின் இரட்சணிய வேலையைப்பற்றி விபரீதமான கருத்துக்கொண்டு யூதரின் மகாசக்கிராதிபத்தியத்தை எதிர்பார்த்திருந்த அவர்கள் பரலோகசம்பாவனையின் உண்மையைக் கண்டுணர்ந்தார்கள். தரித்திரத்தின் மகிமையும், தாழ்ச்சியின் மகத்துவமும் சத்துராதிகளை மன்னிப்பதாலாம் பெருமையும், துன்பதுரிதங்களைச் சகித்துக்கொள்வதால் உண்டாகும் மகிழ்ச்சியும் அவர்களுக்கு வெளிச்சமாயிற்று.

இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொண்டதும் கல்வியறிவற்றவர்களான சீடர்கள் கலைவல்லுனர்களைப்போல் உண்மைகளைப் போதிக்கும் உன்னதம்பெற்றார்கள். அந்தரங்கத்தில் மறைந்து வாழ்ந்தவர்கள் அரங்கத்தில் தோன்றினார்கள். மௌனிகளாக இருந்தவர்கள் பலமொழிப்பண்டிதராய்மாறி, உலகத்தின் எத்திசையிலும் வேதபோதகம்செய்தார்கள். பயத்தினால் பெட்டிப் பாம்புபோன்று பதுங்கியவர்கள் உயிரைப் பலிகொடுக்கவும் தலைநிமிர்ந்து முன்வந்தார்கள். ஈட்டியின் முனைகள் அவர்களுக்குமலர் அரும்புகளாகக் காட்சிதந்தன. தீகக்கும் கிடங்குகளைக் குளிர்பூந்தடங்களாய் மதித்தார்கள். தேவன் ஒருவருக்கன்றி மன்னுதிமன்னர்களின் வாளுக்குத் தலைவணங்குதல் செய்யோம் என்னும் திடவைராக்கியம்பூண்டார்கள்.

இவ்வாறு கணப்பொழுதிலே, சடுதியாகநிகழ்ந்த இந்த ஆச்சரியகரமான மாறுதல்கள்யாவும் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரின் அளப்பரிய வல்லபத்தின் சாட்சிகளன்றோ? சர்வேசுரனுடைய இஸ்பிரீத்துசாந்துவினால் முத்திரை இடப்பட்டிருக்கும்நாம் ஆதித்திருச்சபைக்கு இத்தகைய உயிரையும், தெம்பையும், ஊக்கத்தையும் அளித்த அவரை நோக்கி அன்புபெருக வேண்டுதல்செய்வோம். ஆன்மீகவளமையின் இரகசியத்தை நமக்கருளுமாறு அவரை இறைஞ்சிமன்றாடுவோம்.

இருதயங்களின் பிரகாசமே! எழுந்தருளிவாரும். எங்கள் இருதயங்களில் தெய்வீகச் சுடரொளி காலக் கிருபைசெய்யும். ஆத்துமங்களின் மதுரமான விருந்தாளியே! நீதியின்நிமித்தமும் கிறிஸ்துவ விசுவாசத்துக்காகவும் உபத்திரவப்படுவோரையும், கிறிஸ்துவின் திருச்சபையையும் அவரது பிரதிநிதியாம் பாப்பரசரையும், மேற்றிராணிமார்,குருக்கள், சந்நியாசிகள், கன்னியரையும் பாதுகாத்தருளும்.

உமது மந்தையிற் சேராது

[7-ம் பக்கம் பார்க்க]

## அங்கிளிக்கன் பாதிரியார் குருப்பட்டம் பெற்றார்

அங்கிளிக்கன் குருவாயிருந்தபொழுது "ஓடைச்சபை" ஒன்றை ஏற்படுத்தி அங்கிளிக்கன் சபையினர் தொகையாக மனந்திரும்ப வழிசெய்யுமாறு கேட்ட வண. பிறடெரிக் டேவிஸ் சுவாமியார் ஒல்லாந்திலே கத்தோலிக்க குருப்பட்டம் பெற்றிருக்கிறார்.

வண டேவிஸ் சுவாமியார் அகுஸ்தீனிய சபையிற் சேர்ந்து திருச்சபை ஐக்கியசேவையில் உழைக்க எதிர்பார்க்கின்றார். இவருடைய குருத்துவாபிஷேகத்தின் அடுத்ததினம் ஒல்லாந்தில் ஒற்றுமைத் தினமாகையால் கோயிலுக்குவந்திருந்த ஆங்கிலேயரும், ஒல்லாந்தரும் ஒற்றுமைக்காக இருமொழிகளிலும் செபித்து, லத்தீனில் விசுவாச உச்சாரணஞ்செய்தனர்.

டேவிஸ் சுவாமியாரின் ஒற்றுமை இயக்கத்தில் அமெரிக்க எப்பிஸ் கோப்பல் வேதபண்டிதர் திரு. ஹமில்ரன் கெஸ்சும் உழைத்தார். "ஓடைச்சபை"யை ஏற்படுத்த வத்திக்கான் மறுத்தபொழுது வண. டேவிஸ் கத்தோலிக்கராகி, குருத்துவ படிப்புகளுக்காக ரோமுக்குச் சென்றார்.

## அல்ஜியேர்ஸ் கோவிலடியில் குரு சுட்டுக்கொல்லப்பட்டார்

அல்ஜியேர்சிலுள்ள கோயிலொன்றில் பூசைசெய்துவிட்டு வெளியேறின வண. வின்சென்ற் தெரர் சுவாமியார் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஒருவாரத்துக்குமுன் அல்ஜீரியாவிலுள்ள ஐரோப்பியரும்,முஸ்லீம்களும் சகோதரராய்ச் சமாதானமாய் வாழவேண்டுமெனக் கோரி அறிக்கை வெளியிட்ட 32 குருமாருள் இவரும் ஒருவர்.

வண.தெரர் சுவாமியார் கோயிலுக்குவெளியே நின்ற தமது காரில் ஏறச் சென்றபொழுது இன்னொருகார் அருகில் வந்து நின்றது. ஐந்து வெடிச்சப்தங் கேட்டது.

தலையில் துப்பாக்கிக் குண்டு பட்டுச் சுவாமியார் தரையில் வீழ்ந்தார். அச்சுறுத்தியவனுடைய கார் அங்கிருந்து விரைந்து சென்று மறைந்துவிட்டது.

பெல்ஜிய தேசத்தவரான தெரர் சுவாமியார் அல்ஜீரியாவில்பல்லாண்டுகள் சேவைபுரிந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## ● கொழும்பு

### "யேசுவின் சின்னச் சகோதரர்" என்னும் சந்நியாசிகளின் தலைவரான அதிவண. வியோம் சுவாமியாரின் கொழும்பு விஜயம்

ஆனி 1-ந்திகதி கொழும்புக்கு விஜயஞ்செய்திருந்த அதிவண. வி. யோம் சுவாமியார், தாமுண்டாக்கிய சபையினராகிய மேற்படி சந்நியாசிகளையும்கன்னியாஸ்திரிகளையும் உலகின் பல பாகங்களுக்கும்சென்று சந்திப்பது வழக்கம். கொழும்பிலிருக்கும் அவரதுசபைக் கன்னியாஸ்திரிகளைக் காணவந்த இவர், கடந்த சனிவாரம் 2-ந்தேதி காலை கத்தோலிக்க தொழிலாளர் சங்கமண்டபத்திலேயும், பின்னர் சாயந்திரம் சஞ்சூசையப்பர்கல்லூரி, பொஞ்சீன் ஆண்டவர் மண்டபத்திலேயும் இருசொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

இவற்றின்போது அவர் எடுத்துக் காட்டியவை மிகவும் கவனத்துக்குரியவை: தற்கால உலகம் மிகவும் வீச்சுடன் நடந்து செல்கின்றது. தொழில்தான் சமுதாயத்தில் முக்கிய இடம் பெற்றிருக்கிறதெனக் காணலாம். ஆனால், அதுவோ மனுஷனின் உயர்ந்த நிலைமைக்குத் தகாதவண்ணம், கீழ்த்தரமான கட்டுப்பாடுகளுக்கிசைய நடத்தப்பட்டுவருகின்றது. இவ்வேளையிலேதான் கிறீஸ்துவர்கள் தொழிலின் மகத்துவத்தையும், தொழிலாளியிடம் விளங்கவேண்டிய ஆழமான விசுவாசப் போக்கையும் காட்டவேண்டியது. இதில் சகோ. சாள்ஸ் டீ. புக்கோவின் சீவியம் ஓர் எடுத்துக் காட்டாயிருக்கின்றது.

ஆழமான விசுவாசத்தினால் தேவனுடன் இணைக்கப்பெற்ற ஆத்துமம் ஒன்று, தன்னை பிறரின் இரட்சணியத்திற்காய் அவர்களின் மத்தியில் தொழிலில் ஈடுபட்டவண்ணம், அட்ட தரித்திரத்தினால் வறியவர்களில் வறியனாய்ச்சீவித்து வருவதே இவர் காட்டியவழி. "தேவனுக்கும் மனுஷருக்கும்" தன்னை முழுதும் அர்ப்பணித்துச் சீவிக்கும் சீவியமே இச்சீவியம்.

மற்றவர்களில் நாம வைத்திருக்கும் சிநேகத்தைக் காட்டுவதற்கு, தரித்திரம் அத்தியாவசியமானது. "நான் ஓர் வறியவன். வறியவர்களின் சிநேகிதனென்றதினால் நான் வேலைசெய்து உழைக்கிறேன். வறியவர்களின் சீவியத்தில் பங்குபற்றுவதே, அவர்களை நான் சிநேகிக்கிறேன் என்பதற்கு அடையாளம், என்ற வார்த்தைகளே சகோ. சாள்ஸ் டீ புக்கோவின் சபைத் துறவிகளின் வார்த்தைகளாயிருக்கும்.

இக்கொள்கையானது, துறவிகள் மட்டில் மாத்திரமன்று, கிறிஸ்தவர்கள் எல்லோரினதும் கொள்கையாயிருக்க வேண்டும். உலகமடங்கலும் இவ்வுன்னதபோதகம் தீப்போல்பற்றிவிட்டது. இல்லறத்தோருமே இம்மேன்மை பொருந்திய கோட்பாட்டைத் தங்களுடையதாக்கி, தேவனுக்கும் மனுஷருக்கும் தம்மைத் தத்தம்பண்ணிச் சீவித்துவரத் தொடங்கியிருக்கிறார்கள். இலங்கைத் தீவிலேயும், தற்போது ஏற்பட்டிருக்கும் இன்னல்களின்மத்தியில் இவ்வுன்னத கோட்பாடுகொண்ட அருட்சீவியம் இன்றியமையாததாய் வந்திருக்கின்றதென்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

—*—

# நேயர் தபால்

கனம். ஆசிரிய !

'காவலன்' துரித முன்னேற்றம் அடைந்துவருகிறான். சிறுவர்பக்கம், மகளிர்மன்றம், ஆசிரியர்பக்கம், தமிழ்த் தொண்டுஇதழ், உல்லாசவேளை, சத்தியமறைச் சல்லாபம், பேசும் பேனு என்பன அடிக்கடி தோன்றி நேயரை மகிழ்விக்கின்றன.

'ஆசிரியர்க்குக் கடிதம்' என்னும் பகுதியையும், 'கேட்டுத்தெளியுங்கள்' என்ற பகுதியையும் வெளியிட வேண்டுகின்றேன். கத்தோலிக்க இளம் எழுத்தாளர்களிடையே கதை, கட்டுரைப் போட்டிகளை நடத்தவும் ஏற்பாடுசெய்வீர்களாக. தலையங்கத்தை 27-5-62 இல் வெளியிட்டதுபோல தொடர்ந்து வெளியிடவும். இவையே எனது தாழ்மையான வேண்டுகோள்.

காவலனே ! நீ வாழி !!

இ. பேர்னாட்

* * *

ஐயா ! 3-6-62 இன் பாதுகாவலன் வாரப்பத்திரிகையின் **"உங்கள் பத்திரிகை"** என்ற தலைப்பின் சார்பாக அறியத்தருவது: சில காலமாகத் "திருத்தொண்டன்" என்னும் மாத நூலில் **"கேட்டுத் தெளியுங்கள்"** என்னும் ஒரு பகுதி வெளிவந்தது. பின்னர் அந்நூல் நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே, கேட்டுத்தெளியுங்கள் என்ற பகுதியை நம் கத்தோலிக்க பாதுகாவலன் வாரப்பத்திரிகையில் பிரசுரம்செய்தால் அது எல்லோராலும் வரவேற்கக்கூடிய தொன்றாகுமென்பது எமது எண்ணம்.

இரண்டாவது: கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் முதலியனவற்றுடன் பத்துக்கற்பனைகளில் ஒவ்வொருகற்பனையின் மகத்துவங்களையும், அதன் பலாபலன்களையும் கத்தோலிக்கமக்கள் மட்டுமல்லாது, ஏனைய பிறசமயவாதிகளும் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் அரங்கேற்றிவைப்பதும் யாவராலும் விரும்பத்தக்கது.

ஆனால், எனது சிற்றறிவுச் சிந்தனையின் உதயத்தை ஆசிரியர்கவனத்துக்கு முத்லில் வைத்துக்கொள்வதோடு, என் அபிப்பிராயம் தவறு எனக் கண்டால் அதை மன்னிக்குமாறும் மிகவும் பணிவுடன் கேட்கின்றேன்.

ஞா. சவரிமுத்து
தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு.

* * *

அன்பார்ந்த ஆசிரிய !

எங்கள் பத்திரிகையில் புதிதாய் வெளிவரும் பகுதிகளில் முதலாவதாய் நான் சுவைத்தது: கடந்த இருவாரங்களிலும் நாலாம் பக்கத்தில் வெளியாகிய 'அறநெறி காட்டிய அன்னையும், தீயவழிசெலுத்திய தந்தையும்', 'அரச பக்தியும், இருதய பக்தியும்' என்ற பகுதி.

இரண்டாவதாக, 'இவ்வார அர்ச்சியசிட்டவர்' என்னும் பகுதி. இவற்றிற்கு அடுத்ததாய் எமக்குச் சுவை கொடுப்பது, 'பேசும்பேனு'.

பத்திரிகையின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகிய 'சிறுவர்பக்கம்' வளர்பிறை போல நன்முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. வளரும் பாலர்களைப் போலச் 'சிறுவர் பக்க'மும் நன்றாக வளரட்டும்.

'இளைஞர் பக்கம்' உறங்கிக்கொண்டிருக்கிறது. இளைஞர் பக்கத்திற்கு எழுத எமக்கு ஆர்வம்உண்டு. அனுபவம் இல்லை. 'இளைஞர் பக்கம்' முன்பு போல் சிறப்படைய வேண்டும் எனத் தாங்கள் விரும்பினால், சென்றஆண்டுகளில் செய்ததுபோல் கடிதங்கள், கட்டுரைகளுக்கு வேண்டிய தலையங்கங்களைத் தந்துதவி எம்மை ஊக்கப்படுத்துங்கள்.

எம் கண்ணின் கருவிழிபோல் விளங்கும் 'காவலன்' காலம் உள்ளளவும் வளர்ந்துகொண்டிருக்கக் கடவுள் அருள்புரிவாராக !

மேரி ரோசலின் சூசைப்பிள்ளை
இளவாலை.

## ● இளவாலை

இளவாலை சந்தியோகுமையோர் ஆலயத்தில் கடந்த வைகாசி மாதம் முழுவதும் மரியாயின் வணக்க மாதம் சேனையாளரால் நடாத்தப்பட்டுவந்தது. கடந்த 26-ந்திகதி சனிக்கிழமை தேவாலயம் மிகஅழகுடன் அலங்கரிக்கப்பட்டு மாலை 7மணியளவில் பங்குக்குரவர் பிதா ஜேம்ஸ் டிவிற் அவர்களால் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றப்பட்டு, பின்னர் வேஸ்பர், சற்பிரசாத ஆராதனை நடந்தேறியது.

மறுநாள் ஞாயிறுவாரம் காலை 7-15 மணிக்கு பங்குக்குருவரால் திவ்விய பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. சாயந்திரம் செபமாலையும் பின் சுற்றுப்பிராகாரமும் நடந்தது. அவ்வேளை சிறுவர் குழாம் முன்னே அணிவகுத்துச்செல்ல, மாதர் கைகளில் செபமாலை ஏந்தியவண்ணம் பின்தொடர, [illegible]வர் பக்திப்பரவசத்துடன் அவர்களைப் பின்தொடர, இளைஞர் கீதம் இசைத்தவண்ணம்செல்ல மாதாவை அழகிய சிம்மாசனத்தில் தாங்கிச் சென்றனர். பின்னர் பங்கிலுள்ள மக்களை மாதாவுக்கு ஒப்புக்கொடுத்த பின் சற்பிரசாத ஆசீர்வா[illegible]த்துடன் திருநாள் இனிதே முடிவுற்றது.

## ● வதிரி

வ[illegible]டந்தோறும் நடைபெறும் வதிரி அர்ச். அந்தோனியார் திருவிழா நோவினைகள் 4-ந்திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன. இவைகள் வெளிஆடம்பரங்களின்றி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## ● கரவெட்டி

கரவெட்டி அர்ச். தேவமாதா கோவிலில் வருடந்தோறும் நடைபெறும் வைகாசி வணக்கமாத ஆராதனைகள் வெகு விமரிசையாக நடைபெற்றன. வைகாசிமாதக் கடைசிநாளாகிய 31-ந் திகதி வியாழக்கிழமை திவ்வியபாடற் பூசையுடனும், சிறிய சுற்றுப்பிரகாரத்துடனும் ஆராதனை இனிது நிறைவேறியது.

## ● மிருசுவில்

மிருசுவில், கண்டிரோட்டுக்கு அருகாமையிலுள்ள சேமக்காலைக்கு அண்மையில் 'மோட்சாரோபணத்தாய்' என்னும் நாமத்துடன் பரிசுத்த தேவதாயாரின் திருச்சுரூபம்ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சென்ற ஞாயிற்றுக்கிழமை (3-6-62) மாலை 6-30மணிக்கு மக்கள் ஊர்வலமாகச்சென்று அவவை மகிமைப்படுத்தினார்கள். அவ்வமயம் வண. கட்டளைக்குரவர் நிகழ்த்திய சிறிய பிரசங்கத்தில்: "என்னைத் தலைமுறை தலைமுறையாகப் பாக்கியவதி என்பார்கள்" என்பது மிருசுவிலில் இன்று நிறைவேறிவிட்டது என்று குறிப்பிட்டார் அதன்மேல் சுரூபம் ஆசீர்வதிக்கப்பட்டதும், அடைக்கலச் செபத்துடன் விழா நிறைவாயது.

## ● தாண்டவன்வெளி

### I. சிறிய உள்ளங்களில் திவ்விய யேசு

இவ்வருடம் கர்த்தர்பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாள் அன்று தாண்டவன்வெளிப் பங்கிலுள்ள இருபது சிறுவர், சிறுமியர்கள் அவர்களது சிறிய உள்ளங்களிலே முதன்முறையாகத் திவ்வியயேசுவை வரவேற்றனர். அன்றுகாலை 7 மணிக்கு நடைபெற்ற பாடற்பூசையில், இவர்கள் புதிய வெண்ணிறப் புத்தாடைகள் அணிந்து சம்மனசுக்கள் கூட்டம்போல் காட்சியளித்தனர். பிரசங்கவேளையில் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்கள் இவர்களுக்குப் "புதுநன்மை" பற்றி ஓர் சிறந்த பிரசங்கம் செய்தார். பின் தேவநற்கருணை கொடுக்கும்வேளையில் பீடமத்திக்கு இருவரிருவராகச் சென்று திவ்விய யேசுவைப் பெற்றனர். பூசைமுடிவில் தங்கள் ஞானஸ்நான வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்து, மாதாவின் திரு உத்தரீயமும் பெற்றனர். அதன்மேல் குருமனைசென்று கட்டளைக்குரவரிடமிருந்து ஞாபகார்த்தப் படங்களும், மிட்டாய்களும், ஈற்றில் திருக்கர ஆசீரும் பெற்று, தம் பெற்றோர், உற்றார், உறவினரோடு மகிழ்ச்சியுடன் தங்கள் வீடு சென்றனர்.

### II தேவதாயின் வணக்க மாத முடிவு

கடந்த வைகாசிமாதம் முழுவதும் எங்கள் தேவாலயத்தில் தேவதாயின் வணக்கமாத நோவினைகள் மாதாவின் பக்தர்களால் வெகு பத்திவிமரிசையாய்த் தினமும் மாலை 6 மணிக்கு செபமாலை, பிரார்த்தனை, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் ஆகியனவற்றுடன் நடத்தப்பட்டது. இவ்வருடம் வணக்க மாதக் கடைசிநாளாகிய 31-ம் திகதி வியாழக்கிழமையும், கர்த்தர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாளும் ஒன்றாய் அமைந்ததால் அன்றுகாலை எங்கள் தேவாலயத்தில் 1-ம் பூசை 5-15-க்கும், 2-ம் பூசை காலை 7மணிக்கு தேவதாய்க்குத் தோத்திரப் பாடற்பூசையுமாக நிறைவேற்றப்பட்டது. அன்றுமாலை செபமாலை, பிரார்த்தனையின்பின் திருகோணமலை மேற்றிராசன துணைப் பரிபாலகர் அதிவண. ஜெறோம் டீசா சுவாமி அவர்களால் தேவதாயின் மகத்துவம்பற்றிப் பிரசங்கம் சொல்லப்பட்டது. தொடர்ந்து வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக், வண. பீற்றர் துரைரெட்னம் சுவாமிகள் துணைபுரிய அதிவண. ஜெறோம் டீசா சுவாமி அவர்களால் மாலையாராதனையும், திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டது. ஆசீர்வாதமுடிவில் இப்பங்கில்உள்ள 'மாசில்லா மாதா' பத்திச்சபைக் கன்னியர்கள் வெண்ணிற ஆடையும், நீலநிறக் கழுத்துப்பட்டியும் அணிந்து நால்வர் நால்வராக மாறிமாறித் தேவதாயார் வீற்றிருந்த "சேரோலையை" ஏந்தியவண்ணம் தேவதாயின் பாடல்களைப் பாடிக் கொண்டுசெல்ல திருச்சுரூப ஊர்வலம் நடந்தேறியது. ஈற்றில் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் வணக்கமாதம் அமைதியாக இனிதே நிறைவாயது.

### III. பூசைப்பரிசாரகர் உல்லாச யாத்திரை

தாண்டவன்வெளி பரி. வியாகுல மாதாகோவில் பங்கைச்சேர்ந்த பூசைப்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## ஆசனக்கோவிலில் ஆங்கில ஞானஒடுக்கம்

யாழ்ப்பாணத்திலே ஆங்கிலந்தெரிந்த கத்தோலிக்கருக்கெனப் பரி. கொஞ் சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலில் நிகழும் 10-6-62 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அடுத்த 17-6-62 ஞாயிற்றுக்கிழமைவரை ஆங்கிலத்தில் ஒரு ஞானவொடுக்கம் போதிக்கப்படவிருக்கிறது. மட்டக்களப்பு, மன்ரேசாவைச் சேர்ந்த யேசுசபைக் குரவரான வண. ஜே. எச். பெங்ளர் சுவாமியவர்கள் ஞானவொடுக்க போதகஞ்செய்யவிருக்கின்றார். ஆங்கில அறிவுடையவர்கள் இந்த அரியசந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## திருஇருதய கூட்டம்

யாழ்ப்பாணஆசனக்கோயில் திருஇருதயச்சபை மாதாந்தகூட்டம் சென்ற ஞாயிறு மாலை 5-15மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் கூட்ட அக்கிராசனர் பரிமேலர் சூ. அருளானந்தம், K. S. G. தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திரு. ரி. ஜே. சவுந்தரநாயகம் அவர்கள் "கிறீஸ்தவ சீவியம்"பற்றிச் சிறந்தசொற்பொழிவு ஆற்றினார். நமதுசீவியத்தைத் தேவனின் சித்தத்திற்கு ஏற்க நாம்நடத்துவதே கிறீஸ்தவசீவியம் என்று கூறிமுடித்தார். தலைவரும், காரியதரிசி திரு. ஜே. ஏ. வி. சில்வெஸ்தரும்கூறிய நன்றியுரையுடன் கூட்டம்நிறைவுற்றது.

## ஊர்காவற்றுறை-பண்ணைவீதி

"ஊர்காவற்றுறை-பண்ணைவீதி அதிகம்சீர்கெட்டுப் போயிருப்பதால் போக்குவரத்துக்குப் பெருங்கஷ்டம் ஏற்பட்டுள்ளது. பண்ணைக்கடற்பாலம் பூர்த்தியானபின் அதிலே வாகனப்போக்குவரத்துகள் வெகுவாக அதிகரித்துள்ளன. அதனால சீர்கெட்டுப்போயிருக்கும் இந்தப்பிரதானவீதியை உடனடியாகக்கவனித்துத் திருத்தவேண்டும்" எனப் போக்குவரத்துமந்திரியையும், தீவுப்பகுதி எம். பி. அவர்களையும் கேட்டுக்கொள்ளும் பிரேரணைஒன்று ஊர்காவற்றுறைப் பட்டினசங்கக் கூட்டத்தில் நிறைவேறியுள்ளது.

## யாழ்ப்பாணத் தொகுதிப் பண்ணைகள்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல தொகுதிகளுக்குத்தொகுதிப்பண்ணைக்காணிகள் வவுனியாவில் ஒதுக்கப்படவிருக்கின்றன. காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, கோப்பாய், சாவகச்சேரியாகிய தொகுதிகளுக்கு அந்தந்தத் தொகுதிகளிலேயே தொகுதிப் பண்ணைக்காணிகள் கிடைக்கும். இந்தக்காணிகள் போதியவிஸ்தீரணம் இல்லாதிருந்தால் மேலதிகமானகாணிகள் வவுனியாவிலே ஒதுக்கப்படவிருக்கின்றன.

## வெளிநாடுசெல்ல அனுமதி

சிங்களத்தில் போதியபயிற்சி இல்லாதிருந்தால் அரசாங்கஊழியர்கள் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறலாம் அல்லது இராசினாமாச் செய்யலாமெனத் திறைசேரி சமீபத்தில் ஒரு சுற்றறிக்கை விடுத்தது. அவ்விதம் இளைப்பாறுகின்ற அல்லது இராசினாமாச்செய்கின்ற அரசாங்க ஊழியர்கள் வெளிநாடுசென்று உத்தியோகபதவிகள்ஏற்க அனுமதிப்பதெனத் தற்போது அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதன்படி தொழில்நுட்பஅதிகாரிகள், டக்டர்மார் போன்றவர்கள்உட்பட எல்லாப்பிரிவினரும் வெளிநாடுசெல்ல அனுமதிக்கப்படுவரெனத் தெரியவருகிறது.

## திட்டம் பின்போடப்பட்டது

நீர்கொழும்பு, மூன்னக்கரையிலுள்ள கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையை ஒருசிங்களப் பாடசாலையாக மாற்றும்திட்டத்தின் முதற்படியாக அப்பாடசாலைத் தலைமையாசிரியர்உட்பட ஆறு தமிழாசிரியர்களை இந்தஆனிமாத முதல் இடமாற்றஞ்செய்து பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவானது அகில-இலங்கைத தமிழாசிரியர்சங்க தூதுக்கோஷ்டிஒன்று கல்விப்பகுதியின் சிரேஷ்ட உதவிக்காரியதரிசியைக் கண்டு வாதாடியதன்பலனாகப் பின்போடப்படலாயிற்று. சிங்களப்படிக்க விரும்புகின்ற பிள்ளைகளுக்கு இப்பாடசாலையைச்சூழவர மூன்றுசிங்களப் பாடசாலைகள் இருப்பதையும் தூதுக்கோஷ்டி எடுத்துக்காட்டியது.

## காரணம் கூறுகின்றார்

"அபிவிருத்தித்துறையில் இந்தியா தற்பொழுது துரிதமாக முன்னேற்றம் அடைந்துள்ளது; ஆனால், இந்தியாவை விடச் சிறந்த பூகோளஅமைப்பும், இயற்கைவளமுமுடைய இலங்கை அதிகம் பிற்போக்கானநிலையில் இருக்கின்றது; இதற்குக்காரணம், நமதுநாட்டு மக்கள் பலபிரிவுகளாக அல்லது கோஷ்டிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதேயாகும்; அன்றியும்நாம் பொம்மைகள் போல ருஷியா, அமெரிக்காபோன்ற நாடுகள் போடும் தாளத்துக்குத்தக்கபடி நடனமாடக்கூடியவர்கள்; எல்லாவற்றிலும் பார்க்க நமது அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் நுழைவதற்காகச் சாதி, மத, இன, வகுப்புப்போன்ற நான்கு மேளங்களையும் முழக்குகின்றார்கள்" என்று திரு. ஜஸ்ரின் கொத்தலாவல அன்றுகண்டியிலே கண்டிவர்த்தகசங்கத்தின் நான்காவது வருடாந்த கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசியபோது கூறியிருக்கின்றார்.

## பேராசிரியரின் பொன்னுரை

"தமிழ்மக்கள் அரசாங்கசேவையை நம்பி இனிமேல் வாழமுடியாது; அரசாங்கமே துணையென்று நம்பியிருந்தாலேயே தமிழ்மக்கள் இன்றுபடுகுழியில் வீழ்ந்து தத்தளிக்கிறார்கள்; இனியாவது அவர்கள் விழிப்படையட்டும்; இனியாவது பிறதொழில் துறைகளை நாடட்டும்; எமது வாழ்க்கைநிலை மாறவேண்டின் நாம் பிறதொழில்துறைகளை நாடவேண்டும்; இதனை உணர்ந்தே தமிழ்ச் சர்வகலாசாலையில் தொழில்முறைக்கல்விக்கு முதலிடம்கொடுக்கின்றோம்" என்று தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தலைவரான பேராசிரியர் ஏ. டபிள்யு. மயில்வாகனம்அவர்கள் சென்ற சனிக்கிழமை கொழும்பு, மகளிர்கல்லூரியில் பேசியபோது அறிவுறுத்தியிருக்கின்றார்.

## கல்விக்கமிஷனின் அறிக்கை

தேசிய கல்விக்கமிஷன் நான்குமாத காலத்தில் தனது அறிக்கையைச்சமர்ப்பித்துவிடுமென்று ஆரம்பத்திலே சொல்லப்பட்டது. ஆனால், கமிஷன் தனது அலுவல்களைத்தொடக்கிப் பதினைந்துமாதங்கள்கழிந்தும் இன்னுமே அதன் முழு அறிக்கை வெளிவரவில்லை. இடைக்கால அறிக்கை ஒன்றுமட்டுமே இதுவரை வெளிவந்துள்ளது. கமிஷன் தனது விசாரணையை இன்னமும் நடத்திக்கொண்டிருக்கும்போதே காலங்கடத்த முடியாதகாரணமாக அதுவிசாரணைக் கெடுத்துக்கொண்ட அதே சில விஷயங்களைப் பொறுத்தவரை கல்விப்பகுதி சிலமுடிவுகளை எடுத்துள்ளது. அதனால் தான்செய்யக் கருதியிருந்த சிலமுடிவுகளுக்கு நேர்விரோதமானவைகளைக் கல்விப்பகுதி எடுத்துள்ளதாகக் கமிஷன் முறையிட்டுச்செய்திருக்கிறது.

# கிரேக்க சபையும் றோமன் திருச்சபையும்

இவ்விரு சபைகளுக்குமிடையில் இருக்கும தொடர்புஎன்ன? இச்சபைகளின் வரலாறு என்ன? இவை இரண்டும் ஒற்றுமைப்பட முடியுமா? என்ற பிரச்சினைகள் விசேஷமாக இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கம் கூட்டப்படவிருக்கும் இவ்வருடத்தில் அதிகம் அதிகமாகக் கேட்கப்படுகிறது.

திருச்சபையின் வரலாற்றை ஆராயுமிடத்து இச்சபைகள் இரண்டும யேசுக்கிறிஸ்து நாதரின் பிரதிநிதியாகிய பாப்பாண்டவரின் அதிகாரத்தின் கீழ் ஆதியில் ஒருசபையாகவே இருந்தன. அந்தக்காலத்தில், இப்போது போலவே பாப்பாண்டவர் உரோமை நகரிலேயே வசித்துவந்தார். கீழ்த்தேசக் கத்தோலிக்கரும் மேற்தேசக்கத்தோலிக்கரும் அவருடைய ஞான அதிகாரத்தை ஏற்று அவருக்கு அமைந்து நடந்துவந்தனர்.

ஆனால், கொன்ஸ்ரன்ரைன் சக்கரவர்த்தி தனது தலைநகரை றோமை நகரிலிருந்து கொன்ஸ்ரன்ரிநோபிளுக்கு மாற்றியபோது ஒரு புதுநிலைமை ஏற்பட்டது. சக்கரவர்த்திகள் கிழக்குப்பகுதிப் பிதாப்பிதாக்கள்மீது கூடுதலாகத் தங்கள் அதிகாரத்தையும, செல்வாக்கையும் பாவித்து, அதிகாரவாஞ்சையுடைய பிதாப்பிதாக்கள் தங்களைப் பாப்பாண்டவருக்குச் சரியொத்தவர்கள் என்றுகூறி நடக்கத் தூண்டினர். இதன்காரணமாகக் கீழ்த்தேச சபைக்கும், மேற்தேசசபைக்குமிடையில் ஒருபிளவு ஏற்படத் துவங்கிற்று. ஈற்றில் 1054-ம் ஆண்டில் இரண்டுசபைகளும் பிரிந்தன. இப்பிரிவுக்கு முக்கியகாரணங்கள் அரசியலை அடுத்தனவே. இதன்காரணமாகப் பாப்பாண்டவருடைய அதிகாரத்தைக் கிழக்குச்சபையார் அலட்சியம் செய்தனர்.

ஆனால், சில நூற்றாண்டுகளின்பின் கீழ்த்தேசத்துச்சபைகள் பல றோமான் சபை அதிகாரத்துடன் சேர்ந்துகொண்டன. இவைகள பொதுவாகக் கிரேக்க ஐக்கியசபைகள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகள் ஆதிகாலத்தில் கிழக்குப்பகுதிக் கோயில்களில் நடைபெற்ற திருச்சடங்கு முறைகளையே இன்றும் அனுசரித்து வருகின்றன. இச்சபைகளில் அங்கத்துவம் வகிக்கும் கத்தோலிக்கரின்தொகை சுமார் 80,00,000 என்பர்.

ஆனால், கீழ்த்தேசங்களில் வசிக்கும் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள் இன்றும் பாப்பாண்டவரின் அதிகாரத்தை மறுத்தே சீவித்துவருகின்றனர். இவர்கள் சுமார் 15,00,00,000 தொகையினர். இவர்களைக் கிரேக்க சபையார் என்றே பொதுவாகக் குறிப்பிடுகிறோம். இவர்களை இவ்வாறு அழைத்தாலும் அவர்களில் பதின்நான்கு பதினைந்து தனிப்பட்டசபைகள் அடங்கும். இச்சபைகளில் மிகவும் பெரியசபை ருஷியசபை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய போதனைகள் பெரும்பாலும் எமது திருச்சபையின் போதனைகளை ஒத்திருக்கின்றன. அவர்களுடைய அபிஷேகங்களும், தேவதிரவிய அனுமானங்களும் பொதுவாக உண்மையானவைகள் என்று கருதப்படுகின்றன.

ஆனால், கிரேக்கசபையாரும், றோமன் கத்தோலிக்க சபையாருடன் உலகம் முழுவதிலும் ஒன்றித்து ஐக்கியப்படவேண்டுமென்பதே எங்கள் பரிசுத்த தந்தையாகிய 23-ம் அருளப்ப பாப்பரசரின் வேணவா. இந்நோக்கத்திற்காக விசேஷ செபங்களை ஓதுமாறு அவர் எங்களை மிகவும் விநயமாய் வேண்டிக் கொள்ளுகிறார். ஆகவே, சதாசகாய மாதாவின் ஆதரவில் நடத்தப்படும் இப்பொதுச்சங்கத்தின் பெறுபேறாக இவ்வொற்றுமை ஏற்பட நாம் விசேஷ மன்றாட்டுகளை நடத்திவருவோமாக.

பி. ச.

## சகோதரபான்மையாய் வாழ

அல்ஜியேர்சிலுள்ள 32 பங்குக்குருமார் தாம் அல்ஜீரியாவிலுள்ள சகல மக்களுடனும் சகோதரபான்மையுடன வாழவிரும்புவதாக அறிக்கையொன்று விடுத்தனர்.

அவ்வூரிலிருந்துவரும் மோசமான நிலையைப்பற்றித் தமது கவலையைத் தெரிவித்து, இந்நிலைமைபற்றிப் பாப்புவும், அதிமேற்றிராணியாரும் கூறுவதைத் தாமும ஆமோதிப்பதாகக்கூறி, தமது பங்குகளிலுள்ள யாவரும் சுவிசேஷ போதனைக்குப் பிரமாணிக்கமாயும் கிறிஸ்துவர் என்ற பெயருக்கு யோக்கியமாயும் வாழும்படி ஏவினர்.

## தேவ அழைத்தல் பற்றி முத்திரைகள்

சியென்னாவின் அர்ச். கத்தரின் அர்ச்சியசிஷ்ட பட்டம்பெற்ற 5-வது நூற்றாண்டு ஞாபகமாக ஆனி 12-ந் திகதி, குருத்துவ துறவற அழைத்தலைக் குறிக்கும் தபாற்தலைகளை வத்திக்கான் நாடு வெளியிடவிருக்கிறது.

மூன்று முத்திரைகளில் புராதன சிற்பங்களிலொன்றாகிய "நல் ஆயன்" தலையும், "குரு இன்னொருகிறீஸ்து" எனும் சுலோகமும் பொறிக்கப்பட்டிருக்கும். இரு முத்திரைகள் அறுவடைக்கு ஆயத்தமான வயலின் படத்தையும் "அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் எசமானை மன்றாடுங்கள்" என்ற சுலோகத்தையுங்கொண்டிருக்கும்.

வேறு நான்கு முத்திரைகள், அர்ச். கத்தரின் செபித்துக்கொண்டிருக்கும் வேளையாய்ச் சொடாமொ எழுதிய சித்திரத்தைக் காட்டும்.

## மேற்றிராசனங்கள் தரும் செய்தி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசாரகர் கூட்டப்பிள்ளைகள் தங்கள் கட்டளைக்குரு வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியாருடன் ஓர் உல்லாசயாத்திரையைக் கடந்தவாரம் நடாத்தினர். இவர்கள் கடந்தசனிவாரம் திவ்விய பூசையின்பின் கற்குடாவிற்கு அருகாமையில் உள்ள பாசிக்குடா என்னும் கடற்கரையை அடைந்தனர். அங்கு உடம்புகளைக்கப் பலவிளையாட்டுக்களையும் விளையாடியபின் கடலில் நீராடினர். பின் மதியபோசனம் அருந்திவிட்டுக் கற்குடா கடற்கரைக்கு வந்து கடல் ஓரமாகச்சென்று பல காட்சிகளையும் கண்டுகளித்து மாலையானதும் வீடுதிரும்பினர். இவர்களது பூசைப்பரிசாரகர் கூட்டத்தில் அங்கத்தவர்களாய்இருந்து தற்போது நிலாவெளி அர்ச். சூசையப்பர் கனிஷ்ட குருமடயில் சேர்ந்திருக்கும் ஐந்து நண்பர்கள் இம்முறை விடுமுறையில்வந்திருந்தபொழுது அவர்களைச் சந்தோஷப்படுத்துமுகமாகத்தான் அவர்களையும் கூட்டிச்சென்று இவ்வுல்லாசப் பிரயாணத்தை இப்பங்குப் பூசைப்பரிசாரகர்கள் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆனி மாதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | ஞா. | | இஸ். சாந்து ஆகமனத்திருநாள் | (வி. ம.) | [சி] |
| 11 | தி. | | இஸ். ஆகமனத்திரு. அட்டக 2-ம்நாள் | (வி. ம.) | [சி] |
| 12 | செ. | | ,, ,, ,, 3-ம்நாள் | (வி ம.) | [சி] |
| 13 | பு. | (சதுர் காலம்) | ,, ,, ,, 4-ம்நாள் | (வி. ம.) | [சி] |
| 14 | வி. | | ,, ,, ,, 5-ம்நாள் | (வி. ம ) | [சி] |
| 15 | வெ. | (சதுர் காலம்) | ,, ,, ,, 6-ம்நாள் | (வி. ம.) | [சி] |
| 16 | ச. | (சதுர் காலம்) | ,, ,, ,, 7-ம்நாள் | (வி. ம.) | [சி] |

# சத்தியவேத பாதுகாவலன்

1962–ம் ஆண்டு ஆனிமாதம் 10–ந் தேதி

## சமாதானமும்......

இருபெரும் போர்களிஞல் அல்லலுற்ற உலகு சமாதானத்தை எதிர்நோக்கி ஏங்குகிறது; அடுத்து ஒரு யுத்தத்தைத் தாங்கவியலாதென உணர்கின்றது. எனவே, ஒவ்வொரு தேசத்தலைவர்களின் உதடுகளும் சமாதானக்குரல் எழுப்புகின்றன.

ஆயின், அத்தலைவர்களின் உள்ளங்களோ பயங்கரத்திட்டங்களை உருவாக்குகின்றன. நேசக்கரங்களை நீட்டி அன்பொழுகப்பேசிக்கொண்டே அழிவாற்றல்மிக்க ஆயுதங்களைப் பெருமளவில் தயாரித்து வரும் இத்தலைவர்கள் எமக்குச் சமாதானத்தை அளிப்பர்என எதிர்பார்ப்பது வீண் ; வெறுங்கனவு.

"உங்களிடம் சமாதானத்தை விட்டுச்செல்கிறேன்"எனக் கிறிஸ்து இவ்வுலகைவிட்டுப்பிரியுமுன் கூறிஞர். தமக்குப்பின்னல் திருச்சபையை வழிநடாத்தும் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவையே அவர் இவ்விதம் குறிப்பிட்டார். கிறிஸ்து ஞானமுழுக்குப் பெற்றபோது இஸ்பிரீத்துசாந்து புரு உருவில் அவர்மேல் இறங்கிஞர். சமாதானத்தின் சின்னம் புரு. சமாதானத்தை உருவாக்கவல்லது ஒற்றுமையே.

## .....ஒற்றுமையும்.

அஞ்சியோடிய அப்போஸ்தலர்கட்குத் திடமளித்துத் சத்திய திருச்சபையைத் ஸ்தாபிக்க வழிகாட்டியவர் திவ்வியஇஸ்பிரீத்து சாந்து. இன்றுவரை அச்சபையைக் குறுக்கிட்ட அத்தனை இன்னல்களையும் சமாளிக்க உதவியுள்ளார். உறுதி தளராது, ஒற்றுமை சிதருது, தூய்மை அகலாது கிறிஸ்துவின் பாதையில் கத்தோலிக்கம் ஏறுநடை போடுவதற்கு அவரின் ஞான நடாத்துகையும், அற்புதக் கொடைகளுமே காரணம்.

உலக ஒற்றுமைக்கு முன்னர் கிறிஸ்தவ ஐக்கியம் அவசியம். கிறிஸ்துவை வழிபடுவோரிடையிலாயினும் ஒற்றுமை வேண்டாமா? எம் சபையைவிட்டுப் பிரிந்தோர் மீண்டும் இந்த மந்தையில் வந்து இணைதல் வேண்டும். ஆயின் அந்த இணைப்புக்கான பாதையில் சிக்கல்கள் பல தோன்றுகின்றன. அடுத்துவரும் வத்திக்கான் பொதுச்சங்கம் இச்சிக்கல்களை ஆராயவிருக்கிறது. அதன் முக்கிய இலக்குக் கிறிஸ்தவ ஒற்றுமையே.

எனவே ஐக்கியத்தின் பாதுகாவலரான இஸ்பிரீத்துசாந்து பொதுச்சங்கத்தில் கூடும் ஆயர்கள்மீது தம் அருட்கரங்களை நீட்டியருள வேண்டுமெனப் பிரார்த்திப்போம். இன்றைய திருச்சபையை எதிர்நோக்கும் பயங்கர பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பதில் அவரது ஞானவெள்ளம் உதவவேண்டும் என வேண்டிக் கொள்வோம்.

ஐக்கிய திருச்சபை, இவ்வுலகம் முழுவதும் ஒரே மேய்ப்பனின் கீழ் இணைவதற்கு உதவும். உலகம் அதன்பின்னரே நிரந்தர சாந்தியைத் துய்க்கும். ஆகவே திருச்சபையின் ஒற்றுமை, உலகசமாதானம் என்ற இலட்சியங்கள் நிறைவேற உதவுமாறு திவ்வியஇஸ்பிரீத்துசாந்துவைத் தினமும் பிரார்த்திப்போம்.

## உங்களுக்குத் தெரியுமா?

- அடுத்துவரும் ஐப்பசித்திங்கள் பதினேராம் நாளில் பரிசுத்த தந்தை வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டுகிருர். இத்திகதியை அன்னுர் தெரிந்தெடுத்தமை முன்னர் துருக்கியைச் சேர்ந்த எபேசஸ் நகரத்தில் நடாத்தப்பட்ட பொதுச்சங்கத்தையொட்டிய நிகழ்ச்சிகளை நினைவுறுத்தற்காகவே.
- ஏஜியன் கடலின் கரையோரமாக அமைந்திருந்த எபேசஸ் நகரின் பெரும்பாகம் இன்று அழிவுக்காளாகியுள்ளது. கிறிஸ்துவின் காலத்தில் ரோமைச்சக்கராதிபத்தியத்தின் பிரசித்தி பெற்ற நகர்களிலொன்ருக இது விளங்கியது.
- ஆசிய மைனர் பகுதியின் தலைநகராகவும் எபேசஸ் பெருமை பெற்றுள்ளது.
- 431-ம் ஆண்டில் திருச்சங்கம் இந்நகரில் கூட்டப்பட்டது. ஆனி மாதம் 22-ந் தேதி ஆரம்பிக்கப்பட்ட பொதுச்சங்கம் புரட்டாதி மாதம்வரை நீடித்திருந்தது.
- மரியாய் தேவகுமாரனின் அன்னைஎன்ற சத்தியம் இச்சங்கத்தில் பிரகடனப்படுத்தப்படலாயிற்று.
- பொதுச்சங்கங்களில் 3–வது சங்கம் என அழைக்கப்படும் இச்சங்கத்தின் சில தீர்மானங்கள் ஒதோடக்ஸ், லுதரன், அங்கிளிக்கன் சபையாராலும் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.
- முதலாவது செலஸ்ரின் பாப்புவின் தலைமையில் இச்சங்கம் கூட்டப்பட்டது. இருநூறுக்குமதிகமான மேற்றிராணிமார்கள் இதில் கலந்துகொண்டனர்.
- தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய யேசுக்கிறிஸ்து மனித அவதாரமெடுத்ததையும் அவர் பிதாவோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் சரியொத்தவரென்பதையும் இச்சங்கம் பிரகடனப்படுத்தியது.
- தேவதாய் இஸ்பிரீத்துசாந்துவின் அருளால் கன்னிமைகெடாமலே தேவனின் தாயாகியதுபற்றியும் இச்சங்கம் உறுதிப்படுத்தியது. எனவே அருளப்ப பாப்பரசர் இத்திருநாள் கொண்டாடப்படும் ஐப்பசி பதினேராந்தேதி இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டுவதெனத் தீர்மானித்துள்ளார்.
- 1931-ல் எபேசஸ் பொதுச்சங்கத்தின் 1,500–வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டபோது இன்றைய பாப்பு அதிமேற்றிராணியார் அஞ்செலா ரொங்கோலி விஜயஞ்செய்திருந்தார்.
- தேவஅன்னை தமது இறுதிநாட்களை எபேசஸ் நகரிலேயே கழித்திருக்கலாமெனப் பாரம்பரியங்கள் கூறுகின்றன. 1881-ல் சுவிசேஷ ஆராய்ச்சியாளர்கள் எபேசஸ் நகரின் தென்பக்கமாக ஆராய்ந்தபோது அழிந்துபோன ஒரு சிற்ருலயத்தின் பகுதிகளைக் கண்டுபிடித்தனர். தேவஅன்னை வசித்த இல்லம் இங்குதான் அமைந்திருந்ததென அவர்கள் கருதுகின்றனர்.
- 1927-ல் சுவிசேஷகரான அர்ச். அருளப்பரின் கல்லறை இந்நகரில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆருவது நூற்ருண்டில் யஸ்ரினியன் சக்கரவர்த்தியால் கட்டியெழுப்பப்பட்ட மகாலயமொன்றில் இக்கல்லறை எழுப்பப்பட்டிருந்தது. அழிந்த நிலையிலிருக்கும் இத்தேவாலயம் இப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது.
- அர்ச். அருளப்பரின் கல்லறை இங்கு காணப்பட்டபடியால் அவரின் பாதுகாவலில் தமது இறுதிக்காலத்தைக் கழித்த தேவஅன்னையும் இந்நகரிலேயே மரித்து ஆரோபணமாகியிருத்தல் வேண்டுமென்பது உறுதிப்படுத்தப்படுகிறது.
- 1961-ல் அருளப்ப பாப்பரசர், எபேசஸ் நகருக்கு விஜயஞ்செய்து அருளப்பர் மகாலயத்தையும், மரியன்னையின் தேவாலயத்தையும் தரிசிக்கும் யாத்திரிகர்கட்கென விசேட பலன்களை வழங்கியுள்ளார். இங்கு திவ்விய பூசையின்போதும் மற்றும் பிரதான வைபவங்களிலும் துருக்கிய மொழியை உபயோகிக்கவும் அவர் அனுமதி வழங்கியுள்ளார்.

— சா. பெ.

## ஆண்டுதோறும் சித்திரை 8 ஈஸ்ரர்விழா

இரண்டாவது வத்திக்கான் பொதுச் சங்கத்தின் மத்திய ஆயத்தக்குழுவினருக்குச் சமர்ப்பித்திருக்கும் சில சிபாரிசுகள் ஒப்புக்கொள்ளப்படுமானல் ஒவ்வொரு ஆண்டிலும் சித்திரை 8-ந் திகதி உத்தானஞாயிறு அல்லது ஈஸ்ரர் விழாவாயிருக்கும்.

தற்பொழுது உபயோகத்திலிருக்கும் கிறகோரியார் பஞ்சாங்கம் 1582-இல் 13-ம் கிறகோரி பாப்புவால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குமுன் யூலியன் பஞ்சாங்கம் உபயோகத்திலிருந்துவந்தது. இதை யூலியஸ்சீசர் கி. மு. 45-ல் அனுட்டிக்கச்செய்தார்.

கிறகோரியார் நாட்கணிப்பில் 1000 ஆண்டுகளில் 6 நாட்கள் குறைவாகின்ற பிழையொன்றுண்டு. கீழைச்சபைகளின் ஆயத்தக்குழுத் தலைவர் கருதினல் சிக்கொஞ்ஞானி சிபாரிசுசெய்திருக்கும் முன் குறிப்பிட்ட மாற்றங்கள் இக்குறைபாடுகளை நிவர்த்தியாக்கும். தற்பொழுது கீழைச்சபையினர் வேறு திருவழிபாட்டு நாட்கணிப்பை உபயோகிக்கின்றனர். இவ்விடயத்தில் ஒற்றுமையேற்படின் பரஸ்பர நல்லெண்ணத்திற்கு அடிகோலும்.

பொதுப் பஞ்சாங்கம் உத்தான விழாவிற்கு நிரந்தரமான திகதியை ஏற்படுத்தி, ஆரோகணம், பெந்தெக்கோஸ்து, நற்கருணைத்திருநாள்களுக்கும் நிரந்தரத் திகதியைக் குறிக்கும். எவ்வாண்டிலும் எந்நாளுக்கும் ஒரே திகதியிருக்கும்.

இத்தகைய ஆலோசனைகள் சர்வதேச சங்கத்திற்கு 1923, 1931 லும் ஐ.நா. சபைக்கு 1949, 1950 லும் சமர்ப்பிக்கப்பட்டன. அதில்:


ஓர் ஆண்டு மூன்று மாதங்கள் கொண்ட நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டது; 13 வாரங்களைக் கொண்டது 91 நாட்களாகும். ஒவ்வொரு பிரிவும் ஞாயிறில் ஆரம்பித்து சனியில் முடிவடையும். எனவே, புதுவருடம் ஞாயிறில் ஆரம்பமாகும். ஆரம்ப மாதங்களைவிட மற்றவை 30 நாட்கொண்ட மாதங்களாயிருக்கும். ஆண்டின் இறுதிநாள் மார்கழி 30-ந் திகதி சனிக்கிழமையின் இரட்டிப்பாகக் கருதப்பட்டு, திகதியற்ற வெற்றுநாளாகக் கருதப்படும்.

---

● பதினேழு நாடுகள் சேர்ந்து நடத்தும் ஆயுதப்பரிகாரண மகாநாட்டிலே சென்றவியாழன்று நிகழ்ந்த விவாதத்தில் கலந்துகொண்ட அமெரிக்க பிரதிநிதிபேசுகையில், "அமெரிக்காவை முதலாவதாகவோ அன்றேல் இரண்டாவதாகவோ எதிர்த்துத்தாக்கி அழித்துவிடக்கூடியசக்தி ருஷியாவுக்கில்லை; எதுஎப்படியானுலும் அமெரிக்காமுதலில் எவரையும் தாக்கமாட்டாது" எனக்கூறியிருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார அர்ச்சியசிட்டவர்



## கோடி அற்புதரான
## அர்ச். பதுவை அந்தோனியார்

**திருநாள்: ஆனி—13**

அர்ச். அந்தோனியார் லிஸ்பன்நகரில் 1195-ம் வருடம் ஆவணித்திங்கள் 15-ம் நாள் பிறந்தார். ஞான ஸ்நானத்தில் இவருக்கிடப்பட்ட பெயர் பறுணந்து. இவரது பெற்றோர் பிரபு வம்சத்தினர். தந்தையின் நாமம மாட்டீன் டி புலோனஸ். இவர் தமது புத்தி விவேகத்திற்கும், பத்தி வைராக்கியத்துக்கும், உயர்பண்பாடுகளுக்கும் பெயர் பெற்றவர். மைந்தனும் அவ்வாறே. தமது விருப்பம் எதுவாயிருப்பினும் தேவசித்தம் எதுவென அறிந்து பணிந்துநடக்க இளம்பராயத்திலேயே கற்றுக்கொண்டார். தாழ்ச்சிமிக்கவர். ஒதுங்கி வாழ்வதும், ஆழ்ந்த சிந்தனை செய்வதும், வேதாகமங்களை ஊக்கமாய்க் கற்பதுமே அவர் இளம்பராயத்தில் விசேஷமாய் விரும்பியவை. வாக்கு வன்மையும், கவர்ச்சியுள்ள பேச்சும் அவருக்கு இயல்பாகவே இருந்தன. பிற்காலத்தில் அவர்ஆற்றிய தொண்டுக்கு இக்குணங்கள் உறுதுணையாயின.

**பிரான்சிஸ்கன்சபைப் பிரவேசம்:**

பள்ளிப்பராயத்திலேயே, பிரான்சிஸ்கன்சபைக் குருமாரின் தொண்டில் அவர் மனம்படிந்தது. மொறெக்கோ தேசத்திலே பல பிரான்சிஸ்கன் சபைக் குருமார் வேதசாட்சிகளாக மரித்தார்களெனக் கேள்விப்பட்ட பறுணந்து, தானும் அவ்வாறே பதிதர்மத்தியிலே தொண்டு செய்து வேதசாட்சியாக இறக்கவேண்டுமென்று விரும்பினர். ஆகவே, தமது ஊருக்குக்கிட்ட இருந்த பிரான்சிஸ்கன்சபைமடத்திலே சேர்ந்து பயின்று 1221-ம் ஆண்டு அச்சபையின் திருஅங்கியை அணிந்துகொண்டார். சந்நியாசவாழ்வுக்குத் தனது பெயராக அவர் தெரிந்துகொண்டது துறவிகளின் பாதுகாவலரான வனத்து அந்தோனியாரின் திருநாமத்தையே. தாழ்மை நிறைந்திருந்தவராகையால் தனது ஆற்றல்களையும், குணவிசேஷங்களையும் பெரிதாகமதிக்கவில்லை. சபையின் குற்றேவல் தொண்டுக்கே தான் தகுதியானவரென்று தம்மைத் தாழ்த்தி அப்பதவியையே அளிக்கும்படி தேவனை வேண்டிவருவார். ஆனால், தேவனின் சித்தம் வேறாயிற்று.

**சந்நியாச ஆரம்பகாலம்:**

சந்நியாச படிப்புகள் முடிந்ததும் அவரை மொறெக்கோபிரிவிலே பதிதர் மத்தியிலேயே தொண்டுசெய்ய அனுப்பிவைத்தனர். ஆனால், அங்கு சென்றதும் அவர் வியாதிவயத்தராகித் தாய்நாடு அனுப்பப்பட்டார். போகும் வழியில் அவரதுகப்பல் கடும்புயலிற் சிக்குண்டு சிசிலிதீவைச் சென்றடைந்தது. தெய்வாதீனமாக அவருடைய சபை ஸ்தாபகரான பிரான்சிஸ் முனிவரே அத்தீவுக்கு அக்காலத்தில் வந்திருந்தார். இருவரும் சந்தித்தது இதுவேமுதல்முறை. இது அந்தோனி முனிவருக்கு அளவுக்டந்த மகிழ்ச்சியை அளித்தது. சபைஸ்தாபகரும் அந்தோனிமுனிவரை ஒரு சந்நியாச இரத்தினமென மதித்துக்கொண்டனர். இத்தாலியிலேயே தங்கி மடாதிபர்கள் குறிக்கும் வேலையைச்செய்துவர அனுமதிக்கப்பட்டார். குற்றேவல்செய்யும் வேலையை விரும்பிக்கேட்டுப் பெற்றுக்கொண்டார். ஆனால், அவரில் விளங்கிய தாழ்மையும், செறிந்த பக்தியும், நிரம்பிய அறிவும், தேவன் அவரின்மேல் வைத்த அன்பும் அவர்மூலம் நிகழ்ந்த அற்புதங்களும் நாளடைவில் அம்பலமாயின. சபையின் தலைவரும் இவற்றைஅறிந்து, குற்றேவல்செய்யும் பணியிலிருந்து நீக்கி அவரது அறிவுக்கும், ஆற்றலுக்கும்தக்கதாக இத்தாலி, பிராண்ஸ், ஸ்பானியா தேசங்களிலே உள்ள பிரதான பிரான்சிஸ்கன் சந்நியாசமடங்களில் உயர்தர வேதபோதகத் தொண்டு செய்துவர உத்தரவிட்டார். இக்கடமை இவர் இத்தேசங்களின் பலபாகங்களிலும் உள்ளவர்களை அறியவரவும் அதனால் அவர்களை, பின்பு மனந்திருப்பவும் உதவிற்று.

**பதிதர் மத்தியிலே:**

இவ்வாறு மடங்களின் உயர்தர வேதபோதகராகச் சிலகாலம் கடமையாற்றியபின், ஐரோப்பிய பதிதரிடையே வேதத்தைப்பரப்பும் வேலையைக் கையேற்குமாறு கேட்கப்பட்டார். இந்த வேலை அவருக்கு மிக உகந்ததாயினும் தாழ்ச்சிமிகுதியால் தாம் அதற்குத் தகுதியற்றவரெனக்கொண்டு தன்னைச் சுத்திகரிப்பதற்காகக் கடுந்தபங்களைச்செய்து வேலையைத்தொடங்கிநடத்தினர். வெற்றி எதிர்பாரா வேகத்தில் வந்துஎய்தியது. அவரது கைகளினால் தேவன்செய்த புதுமைகள் கோடிக்கணக்கானவர்களை மனந்திருப்பியது. அவரது தாழ்மையையும், பரிசுத்ததனத்தையும கண்ட பதிதர் அவரிடம்வந்து அளவளாவி அவர் சொல்வதின் உண்மையைக் கண்டுகொண்டனர். அவரது அஞ்சா நெஞ்சம் பல பதிதஅரசர்களையும், அவரது பிரசைகளையும் தூயநெறிகாணச் செய்தது.

**மரணமும் அதன்பின்பும்:**

தபத்தின் கடுமையினாலும், உழைப்பின் வேகத்தினாலும் முனிவரதுதேக சுகம் விரைவாகக் குன்றிவந்தது. அந்தியகாலம் சமீபத்தை அறிந்தமுனிவர் தமது அக்கால இருப்பிடமாகிய பதுவைப் பட்டணத்துக்குத் தம்மைக் கொண்டு செல்லுமாறு துணைவரைக் கேட்டுக்கொண்டார். போகும்வழியில் கோடிக்கணக்கானோர் கூட்டம்கூட்டமாகக்கூடி தமது அன்பைக்கண்ணீர்ப் பெருக்குடன் கூறிநின்றனர். பதுவைக்குப் போகும்வழியில் ஒரு குக்கிராம மடத்தில் அந்தியதேவதிரவிய அனுமானங்களைப் பெற்றதன்பின்பு தமது 36-ம் வயதில் 1231-ம்ஆண்டு ஆனி மாசம் 13-ம்திகதி மரணமாயினர். அவரது மரணசெய்தி காதுக்குஎட்டியதும் மனமுடைந்து ஓவென்று அலறாதவர் எவருமேயில்லை. தேகஅடக்கம் பதுவைப் பட்டணத்தில் நடந்தது. இன்று அவர் பெயரால் ஒரு பாரிய தேவாலயம் அந்நகரில் உண்டு. அவரது கல்லறைக்குச்சென்று சலுகைகளைப்பெற்று வருகின்றவர்களின் தொகை அ[illegible] வர் இறந்து [illegible] காலபாப்பாசராகிய 9-ம்கிறகோரியார் அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அளித்தனர். அத்தருணம்: "அவரது புதுமைகளை ஊர்ஜிதம் செய்யும் அத்தாட்சிகள் ஏராளமாகவுண்டு; அவரது பரிசுத்ததனத்தைப்பற்றி நாமே நன்கறிவோம்" எனக்கூறியருளினர். அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரினது நா[illegible]யாவரம்பெற்று இன்[illegible]ன்றுபோல் புனிதத்தன்மையுடன் இருக்கின்றது.

---

## வானமும் பூமியும்
## ஒழிந்துபோம்....

வஞ்சகத்தீப் பந்தமொடு வன்கண் ணளர்
    வையகத்தி லெண்ணரிய வதைசெய் தாலும்
நஞ்சுவெறி மயக்கேற்றி நல்லோர் வாழ்வை
    நாடோறு மணுவணுவாய் நசித்திட் டாலும்
வெஞ்சுடரும் வெண்ணிலவுந் தரளச் செல்வம்
    விளைகடலும் புவிமிசையே நிலைக்கும் மட்டும்
அஞ்சுதற்கோ ரிடமில்லைச் சத்தியத்தின்
    அறநெறியோ சிரந்தாழ்த்தி அறியா தம்மா.

●

மண்ணகத்தி லுண்மைகளைத் திரித்துக் கூறி
    மயக்குரைகள் விதைத்திடினும் மாயப் பேயின்
எண்ணமெலா முருவாக்கி யின்னற் பாதை
    இருளினிலே யிழுத்திடினுங் கரையில்லாத
விண்ணுமொளி யுடுக்குலமும் வீசுங் காற்றும்
    வீழாது நிலைத்திருக்குங் காலம் மட்டும்
புண்ணியத்தி னுருவான சத்ய வேதம்
    புகழ் மங்காச் சுடரோங்கி வாழுமம்மா.

●

சுற்றிவரும் பூதலத்தைச் சுடுகாடா க்கிச்
    சூழுரைத்து வல்லசமர்க் கருவி தேடிக்
கற்றபய னறியாது வாழும் மாக்கள்
    காலமெலாம் முயன்றுபல சதிசெய் தாலும்
முற்றியுதிர் சருகாகி முயற்சி யாவும்
    முடிவினிலே பொடியாகிச் சிதறி வீழும்
வெற்றி கொளுஞ் சத்தியத்தின் சங்கமூதும்
    வேதமணித் திருவாக்கோ அழியா தம்மா.

"ஜோதி"

---

## நரகத்தின்பூட்டு உள்ளே

நரகம் உண்டென விசுவசிப்பது எனக்கு மிகமிகக் கடினமாயிருந்துவந்தது. கடவுள் அன்பு. பரிபூரணர். அப்படியாயின், நித்தியமான ஒரு மறியற்கூடம், முடிவில்லாதவேதனை இருப்பதெப்படி?

எமது உலக நீதாசனங்கள் இளகியவை அல்ல. எனினும் ஆயுள்காலத் தண்டனை பெற்றவன் மறியலில் "நல்நடத்தை" காட்டினால், 10, 12 வருடத் தண்டனைக்குப்பின் விடுதலையடைகிறான். இது பல நாடுகளில் நடைபெறுகிறது.

கடவுள் இளகமாட்டாரா? எமது சகோதரரை ஏழு எழுபதுதரம் மன்னிக்கவேண்டுமென யேசுவின் திருவாக்கு இருக்க, கடவுள் மன்னிக்க மாட்டாரா?

உலகத்தில், ஒருவேளை செய்த குற்றத்திற்காக, பாவத்திற்காக, நித்திய காலத் தண்டனை தருவது அநீதியல்லவா?

வேதபண்டிதர் ஒருவரிடம் விளக்கங் கேட்கச்சென்றேன்.

"இதிலே நான் சொல்ல என்ன இருக்கிறது? கிறீஸ்து நரகத்தைப் பற்றி அடிக்கடி போதித்திருக்கிறார். மலைப்பிரசங்கத்தை வாசித்துப் பாருங்கள். எட்டுப்பாக்கியங்களுடன் நின்றுவிடாமல் இறுதிவரை வாசியுங்கள்" என்றார்.

எவனாவது ஒருவன் நரகத்திலே கிடக்கிறான் என்று நிச்சயமாய்க் கூற நாம் யார்? யூதாஸ் ஸ்காரியோத்தைப் பற்றிக் கூட அப்படிச்சொல்ல முடியாது. நரகம் உண்டு என்பது நிச்சயம். அது வெறுமையாயிருக்கவுங்கூடும்.

எனினும் ஒருமனிதன் தன் வாழ்நாளில் அக்கிரமத்துக்கு மேல் அக்கிரமஞ் செய்திருக்கிறான்; மனம் மாறவில்லை. வேறொருவன் எந்நாளும் தன் அயலாருக்கு இடையூறு செய்துவந்தான்; இறுதிவரை அவர்களுடைய கேவல நிலையைப் பார்த்து ஏளனஞ் செய்தானுக்கும் இன்னொருவன் கடவுளைத் திட்டிச் சபித்து, சாகும்போதுங்கூட சபித்துக்கொண்டே செத்தான். இப்படிப்பட்டவன் கடவுளுடைய பரமானந்த தரிசனையைப்பெற யோக்கியதை உள்ளவன் தானா?

கடவுள் அன்பு; எனினும் அன்பை ஒருவர்மேல் வலுக்கட்டாயமாய்த் திணிக்கமுடியாது. அன்பு "இல்லை" என்ற மறுப்புக்கு மதிப்புத்தருகிறது. ஆகவே கடவுளிடம் வரவிருப்பமில்லாதவனைப் பலவந்தமாக வரச்செய்வதில்லை. அவன் தன் வெறுப்பின் கைதியாகி, "வெளியிலே"யே யிருப்பான்.

அவனுக்கு அவனே கடவுள்; அ[illegible] கடவுள்; தானே தனக்குக்கதி. அவனுடைய சித்தம் அல்லது மனம் இரும்பாகிவிட்டது; தானே அதை இறுகவிட்டான்.

அவன் மனம் இனிமேல் மாறாது. எடுத்துவைத்த அடி பின்வாங்கமாட்டான். தன் மறியலைவிட்டு வெளியேற மாட்டான். தன்னைத்தானே தனக்குள் தாளிட்டுக்கொண்டான். **நரகத்தின் பூட்டு உள்ளே.**

கடவுளை வெறுத்தவன், அவர் இல்லாமலே இருக்கவேண்டியவன். இதுவே நரகம். இந்த நரகம் இம்மைச்சீவியத்திலும் உண்டு. அதை அனுபவத்தில் காணுகிறோம்.

மோட்சமோ நரகமோ — நாமே தெரிந்துகொள்ள வேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பக்கம்

**என் செல்வச் சிறுவர்களே! உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்.**

உங்கள் கிராமத்துக்கு நான் பலதடவை வந்திருக்கிறேன். உங்களுடன் அளவளாவி உரையாடியிருக்கிறேன். உங்களிடத்தில் நான் அவதானித்த சிலவற்றைச் சொல்லவிரும்புகிறேன். உங்களில் சிலர் வேதவிசுவாசம் குறைந்தவர்களாகக் காணப்படுகிறீர்கள், சிலரிடத்தில் வைரமானபக்தி இல்லை. சிலர் மழுங்கின புத்தி உள்ளவர்களாகக் காணப்படுகிறீர்கள். வேறுசிலர் தேவனில்லை மோட்சம் இல்லை, நரகம் இல்லை என்கிறார்கள். இன்னுஞ்சிலர் திருச்சபையின் ஞானஅதிகாரிகளைப்பற்றிக் குறைகூறுகிறார்கள். இது மிகவும் விசனிக்கத்தக்கதொன்றாகும். நாளைய கத்தோலிக்க பிரசைகள் நீங்கள் என்பதை மறந்துவிடாதேயுங்கள். கத்தோலிக்கதிருச்சபையின் சுபீட்சம் உங்கள் ஒவ்வொருவரிலுந் தங்கியிருக்கிறது.

யேசுநாதர் பரலோகத்துக்கு ஆரோகணமானபின் அப்போஸ்தலர்களும் சீஷர்களும் யூதர்களுக்குப்பயந்து ஒருஅறைக்குள் கதவைப்பூட்டிக்கொண்டு செபத்தில் நிலைத்திருந்தார்கள். அர்ச். கன்னிமரியாயும் அவர்களோடு இருந்தார். கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளியபின் பத்தாம்நாள் அதிகாலையில் காற்றுப் பெலமாக அடிக்கத்தொடங்கியது. திடீரென்று வானத்திலிருந்து ஒருபெரியசப்தம் உண்டானது. அவர்கள் உட்கார்ந்திருந்த வீடுமுழுவதையும் அவ்வொலி நிரப்பிற்று. அத்தருணத்தில் இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரன் அக்கினிநாக்கு மயமாக அவர்கள் ஒவ்வொருவர்மேலும் இறங்கினார்.

பயத்தினால் ஒளித்திருந்தவர்கள் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டு கிறிஸ்து இராசாவின் போர்வீரர்களாக வெளிக்கிளம்பினார்கள். யூதர்களிடம் போய் அஞ்சாநெஞ்சுடன் நீங்கள் சிலுவையில் அறைந்துகொன்ற யேசுநாதர் மெய்யானசருவேசுரனின் குமாரன்என்று பிரசங்கம்பண்ணத் தொடங்கினார்கள். அர்ச். இராயப்பர் வீராவேசத்துடன் நிகழ்த்திய முதற்பிரசங்கத்தைக்கேட்டு 3000 யூதர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலர்களும் சீஷர்களும் பல்வேறு மொழிகளைப் பேசத்தொடங்கினார்கள். ஒருமொழியில் பிரசங்கஞ்செய்யக் கேட்டுக்கொண்டுநின்றவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் மொழியில் விளங்கிக்கொண்டனர். உலகம் எங்கும்போய்ச் சுவிசேஷத்தைப் போதிக்கத்தொடங்கினார்கள். அர்ச். அருளப்பரைத் தவிர்ந்த மற்ற அப்போஸ்தலர்கள் எல்லோரும் வேதசாட்சிகளாக மரித்தார்கள்.

வேதவிரோதியாகவிருந்த சவுல் மனந்திரும்பி பவுல் ஆனதின் பின்னர், இஸ்பிரீத்துசாந்துவினால் வனாந்திரத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் அருளால் ஞானவெளிச்சம் பெற்றுப் பெரிய அப்போஸ்தலரானார்.

என் அருமைச் சிறுவர்களே! நீங்கள் ஞானஸ்நானத்தின் வழியாகத் தேவபுத்திரர் ஆனீர்கள். உறுதிப்பூசுதல்வழியாக இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனையும் அவருடைய கொடைகளையும் பெற்றுக் கிறிஸ்துஇராசாவின் போர்வீரர்கள் ஆனீர்கள். அப்படியாயின் உங்கள் வேதவிசுவாசம் எங்கே? வைரமான பக்தி எங்கே? அவர்கள் சுவிசேஷத்தைப் போதித்தார்கள்; நீங்கள் கடவுள் இல்லை என்கிறீர்கள். அவர்கள் கடவுளுக்காக உயிரைக்கொடுத்தார்கள்; நீங்கள் உலகஇன்பங்கள்மட்டும் போதும் என்கிறீர்கள். அப்போஸ்தலருக்குக் கொடுத்ததுபோல இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் உங்களுக்கும் தமது கொடைகளாகிய ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பத்தி, தேவபயம் என்னும் ஏழுகொடைகளையுங் கொடுத்து இருக்கிறார்.

ஆதலால் நீங்களும் இஸ்பிரீத்துசாந்து தேவனில் விசேஷ பக்திவைத்து அவருடைய உதவியை இரந்துகேளுங்கள். அவருடைய தெய்வீகமில்லாமல் மனிதரிடத்தில் நிறைவானது ஒன்றும் இல்லை என்பதைமறந்து விடாதேயுங்கள். வணக்கம்.

அன்புள்ள அண்ணா.

# நான் ஏன் தினப்பூசைக்கு சமுகமளிக்க வேண்டும்?

1. திவ்வியபூசை தேவனுக்குச் செலுத்தப்படும் ஒருவணக்கப்பலி. ஆகவே, தினமும் நான் பூசையில் பங்குபற்றி, கடவுளை வணங்குவேன். காலையில் எழுந்தவுடன் தனது சிருஷ்டிகரை ஆராதிப்பதுதான் மனிதனுடைய முதற்கடமையாகும்.

2. திவ்வியபூசை நன்றிப்பலி. ஆதலால் தேவனுக்கு, எங்கள் அன்புள்ள தந்தைக்கு அன்றன்றுள்ள அப்பத்தைத்தந்து நாள்தோறும் இரவுபகலாய் எம்மைப்பாதுகாத்து, பரிபாலித்துவரும் கடவுளுக்கு என்து நன்றியைக் காண்பிக்க காலையில் முதற்கடனாகத் திவ்வியபூசைக்குச் சமுகமளிப்பேன்.

3. திவ்விய பூசைப்பலி எமது பாவங்களுக்கு ஒருபரிகாரப்பலி, நான் ஒருபாவி. முன்ஒருநாள் கல்வாரி மலையிலே எனக்காகயேசு சிந்தியதிரு இரத்தம் இங்குமீண்டும் ஒப்புக்கொடுக்கப்படுவதால், அந்தப்பலி தினமும் புதுப்பிக்கப்படுவதால், எனக்கும், உத்தரிப்புஸ்தலத்தில்வேதனைப்படுகிற ஆத்துமாக்களின் இளைப்பாற்றிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் பலியில் நான் பங்குகொள்ளுவேன். அதனால் தேவனின் நீதிக்கோபம் தணியவும், எனக்குமன்னிப்பும், ஆத்துமாக்களுக்கு ஈடேற்றமும் கிடைக்கும்.

4. திவ்வியபூசை ஒரு விண்ணப்பபலியுமாகும். நான் தினப்பூசையில் பங்குகொண்டு யேசுவுடன் ஐக்கியமாகி, இப்பலியின் விலைமதிப்பற்ற பெறுபேறுகளின் நிமித்தம் எனது ஆத்துமசரீர நன்மைகளுக்காகவும், எனது உறவினர், உபகாரிகள், பெற்றோர், நண்பர்களின் நன்மைகளுக்காகவும் தேவனை மன்றாடுவேன். எனது வேண்டுதல்களைச் சமர்ப்பிப்பேன்.

உலகில் இதுவரை ஒப்புக்கொடுக்கப்படாத மாபெரும்பலி யேசுவின் சிலுவைப்பலியாகும். தேவசுதனான யேசு தாமே மனுக்குலத்துக்காகச் சிலுவைமரத்தில் பலியானார். அதன் ஞாபகமாகவே பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அது இரத்தஞ்சிந்தாதவகையில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. பரமபிதாவுக்கு மிகவும் விருப்பமானபலியும் இதுவேயாகும். திவ்விய பூசைப்பலியே சிறந்த செபமுமாகும். எனவே, அடிக்கடியும் கூடுமானால் நாள்தோறும் திவ்வியபூசைக்குச் சமுகமளிப்பது நன்றல்லவா?

எஸ். எம். ஜே.

# விஞவிடை அரங்கு

(1) யாழ்ப்பாணத் திருச்சபையை ஆட்சிசெய்த மூன்றாவது மேற்றிராணியாரின் பெயர் என்ன?

**மகாவந்தனைக்குரிய மெலிசன் ஆண்டவர் அவர்கள்.**

(2) கிழக்குநாடுகளில் ஏகாந்த துறவிகள்சபை ஒன்றை முதன்முதலாக ஸ்தாபித்த குருவானவர் யார்?

**வணக்கத்துக்குரிய பி. ஏ. தோமஸ் O. M. I. சுவாமியார் அவர்கள்.**

(3) ஒலிம்பிக் விளையாட்டுகள் எங்கே, எப்போ மூதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது?

**கிரீசில் கி. மு. 776-ல் ஆரம்பிக்கப்பட்டது. ஏககாலத்தில் ரோமிலும் ஆரம்பிக்கப்பட்டது.**

(4) பழையஏற்பாட்டில் சொல்லப்படும் சலப்பிரளயம் எப்போது ஏற்பட்டது?

**கி. மு. 4000 ஆண்டில் ஏற்பட்டது.**

(5) புதைபொருள் ஆராய்ச்சியாளர் சிந்துநதிப்பள்ளத்தாக்கில் கண்டுபிடித்த பட்டணங்கள் எவை?

**"ஹரப்பா"; "மோகஞ் சதரோ"; "சுங்குதாலோ" என்பன இப்பட்டணங்களில் 6000 வருடங்களுக்குமுன் திராவிட மக்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.**

(6) உலகில் மிக விலைஉயர்ந்த உலோகம் எது?

**இராடியம்.**

(7) குட்டி ஈனும் மீன்கள் எவை?

**சுறாவும், திமிங்கலமும்.**

(8) மிளகாய் எந்நாட்டுச்செடி? இப்பெயருக்குக் காரணம்யாது?

**அமெரிக்கநாட்டுச்செடி. அது மிளகைப்போல் காரமுடையதாக இருப்பதால் மிளகாய் எனப் பெயர்வந்தது.**

(9) தற்கொலைசெய்வது பாவமா?

**ஒருவன் தனது சொந்த உயிரை நீக்கிக்கொள்வது தற்கொலை எனப்படும். "கொலை செய்யாதிருப்பாயாக" இது தேவகட்டளை. எந்த முகாந்தரத்தை இட்டுத் தற்கொலைசெய்தாலும் அது பாவமாகும். ஒருவனுடைய உயிர் கடவுளுக்குச் சொந்தமானது. கடவுளுக்குச் சொந்தமான உயிரை அவருடைய விருப்பத்துக்கு மாறாக உடலிலிருந்து நீக்குவது பாவம்.**

(10) தற்கொலைசெய்வது ஒரு தீரச்செயலா?

**தற்கொலைசெய்வது ஒரு கோழைத்தனமான செயல். அதில் வீர, தீரம் சிறிதும் இல்லை. வாழ்க்கையில் ஏற்படும் இக்கட்டு, இடைஞ்சல், வருத்தம், தோல்வி, அவமானம் முதலியவற்றை மேற்கொள்ளத் துணிவும் வீரமும் இல்லாத ஒருவன்தான் தற்கொலைசெய்து கொள்ளுகிறான். ஆதலால் தற்கொலை ஒரு இழிவான கோழைத்தனமான செயல்.**

## நற்சிந்தனை

நீ, உன்னை நன்கு அறிந்தால், உனது தகுதிஇன்மையை நன்கு உணர்வாய். அப்போது மற்றவர்கள் உன்னைப் புகழ்வதை விரும்பமாட்டாய். உன்னைப் பெரியவனாகக் கணிக்கமாட்டாய், பிறரைப்பற்றிக் குறைகூறமாட்டாய். மற்றவர்களுடைய குற்றங்குறைகளைப் பாராட்டமாட்டாய். மற்றவர்கள் உனக்குச் செய்த குற்றங்களை மன்னிப்பாய்.

நீ, உன்னை அடக்குவாயானால், வாழ்க்கையில் உனக்குப் பெரிய வெற்றி. உலகம்முழுவதையும் அடக்கி ஆளும் வீரனிலும் நீ பெரிய வீரன். தன் அடக்கம் உள்ளவன் ஞானி. தன்னை அடக்குவது மிக அரிது. ஏனெனில், சுயஇச்சைகளை எதிர்த்துப் பெரும்போர் செய்ய வேண்டும்.

நீ, உன்னை மதித்தால், உலகமும் உன்னைமதிக்கும். தன்மதிப்பு அந்தஸ்துக்கு உகந்த ஒழுக்கசீலங்களை அனுசரிப்பதில் அடங்கும். நீ உன்னை மதியாவிட்டால், மற்றவர்களும் உன்னை மதிக்கமாட்டார்கள்.

ஒழுக்கம்நிறைந்த உத்தம வாழ்க்கைக்கு (i) தன்அறிவு (ii) தன் அடக்கம் (iii) தன்மதிப்பு ஆகிய மூன்றும் மிக, மிக அவசியம்.

● 1,600 வருடங்களுக்குமுந்திய புராதனகோவில் ஒன்றுடன் கூடிய இடிகரையான நகரம்ஒன்றை எகிப்திய வனாந்தரத்தில் புதைபொருளாராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். மூன்றாம்நூற்றாண்டின் வேதசாட்சியான அர்ச். மீனாவின்கல்லறைக் கோவில் அங்குதானே இருந்ததாகப் பாரம்பரியம் கூறுகின்றது.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### ஆனி மாதம்

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதரில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் இஸ்பிரீத்து சாந்துவின் ஏவுதல்களுக்கு அதிக தாராளமனதோடு பணிந்து நடக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** கிறிஸ்தவர்கள்மத்தியில் உண்மையான ஒற்றுமை உண்டாகி, அதன்மூலமாய்க் கிறிஸ்துநாதரின் உண்மையான சபையாகிற கத்தோலிக்க திருச்சபையில் சேரும்வழியை யாவரும் அறியும்படியாக மன்றாடிக்கொள்வது.

* * *

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே!

மகளிர்மன்றம் மங்கையரால் பெரிதும் மனமுவந்து வரவேற்கப்படுவதை அறிந்து மனமகிழ்வுறுகின்றோம். மகளிர்மன்றம் மலர்ந்து மணங்கமழ, கட்டுரைகள், கவிதைத்தொகுப்புகள், அழகுக்குறிப்புகள், சமையற்கலைகள் ஆகியவற்றைத் தயாரித்து அனுப்பிவைத்து ஆதரிப்பீர்களென நம்புகிறோம்.

ஆனிமாதம் தொடங்கிவிட்டது. இருதய அரசரின் மாதம். இல்லத்தரசிகளாகிய நீங்கள் இருதய அரசர்க்கு ஆறுதலளிக்க என்னசெய்கிறீர்கள்? உங்கள்வீட்டில் இருதய ஸ்தாபகம் செய்துவிட்டீர்களா? இல்லையேல் இம்மாதமே அதற்குப் பொருத்தமானது. இம்மாதத்தில் நாளாந்தம் அல்லது வெள்ளிக்கிழமைகளிலாவது இருதய ஸ்தாபக படத்தின்முன்னால் ஒருசிறு விளக்கு ஏற்றிவைக்க மறவாதீர்கள். தேவநற்கருணை விழாக்களில் பங்குபற்றி இயன்றஉதவி செய்யுங்கள். குடும்ப செபமாலையுடன் வணக்கமாத முயற்சியையும் சேர்த்துக்கொள்ளுங்கள். திருமணித்தியாலப்பக்தி, இரா ஆராதனை முதலியனவும் இம்மாதத்துக்குரிய சிறப்பான அம்சங்களே. இவ்விதமாக இருதயஆண்டவரின் அரசாட்சியை உங்கள்வீட்டில் நிலைநாட்டுங்கள்.

வணக்கம்!

அடுத்தவாரம் சந்திப்போம்.

அன்புச் சோதரி ரோஜா

## மங்கையே! நீ பாக்கியவதி.

1 வீடுநாடிவரும் ஏழைகட்குத் தானதருமஞ்செய்யத் தயங்காத தையலே, நீ பாக்கியவதி! ஏனெனில், உன் புத்திரர்கட்கு இவ்வுலகில் செல்வாக்கானவாழ்க்கைக்கு அஸ்திவாரமிடுகின்றாய்.

2. வீட்டையும், சூழ்நிலையையும் புனிதமாகவும், அழகாகவும் காப்பாற்றும்பெண்ணே, நீ பாக்கியவதி! ஏனெனில், உன்கணவனோ, வயதுவந்த மக்களோ பிறமனைநாடிக் கெட்டழியாது தாமாகவே வீட்டைநாடிவர வழிவகுக்கின்றாய்.

3. சாந்தமும், பொறுமையுமே பெரிதான ஆபரணங்களென மகிழ்ந்து அணியும் மங்கையே, நீ பாக்கியவதி! ஏனெனில், முரட்டுத்தனமான கணவனையும் சிலநாட்களில் சாந்தமுள்ள பசுவாகமாற்றி இல்லறஇன்பத்தை அனுபவிப்பாய்.

4. ஆடம்பர வாழ்வைநீக்கி வரவுக்கேற்றசெலவுசெய்யும இல்லத்தரசியே, நீ பாக்கியவதி! ஏனெனில், உன்கணவன் கவலையற்றுத்தூங்கக் கணவிழித்துக் காப்பாற்றும் காவற்சம்மனசாகும் பெருமையைப் பெறுகின்றாய்.

5 கணவனது உத்தியோக இழப்பிலோ, மற்றும் நிர்ப்பாக்கியங்களிலோ அவனை வெறுக்காது உழைத்து ஆதரிக்கும் பெண்ணே, நீ பாக்கியவதி! ஏனெனில், சங்க இலக்கியநூல்களில் வீரப்பெண்களின் வரிசையில் நீ இடம்பெற்றுவிடுகின்றாய்.

6. குடும்பக்கட்டுப்பாடுபோன்ற நவநாகரீகமுறைகளை வெறுத்தொடுக்கும் கற்பரசியே, நீ பாக்கியவதி! ஏனெனில், உன் பிள்ளைகள் திருச்சபையின் வச்சிரத்தூண்களாய் விளங்கக்கண்டு ஈன்றபொழுதிலும் பெரிதுவப்பாய்.

7. உன் கணவனதும், குழந்தைகளினதும் நலனுக்காக உன்னையே பரித்தியாகஞ் செய்யத்துணியும் தியாகச்சுடரே, நீ பாக்கியவதி! ஏனெனில், உன் வயோதிபத்தில் அவர்கள் உன்னை ஆதரித்து உன் மரணத்தின் பின்னும் உன்னை நினைவுகூருவார்கள்.

8. உன் குடும்பத்தவருடன் காலைமாலைச்செபம், குடும்பசெபமாலை ஓதிவரும் பெண்மணியே, நீ பாக்கியவதி! ஏனெனில், ஓர்நாள் உன்குடும்பத்தவர் புடைசூழ நீ மோட்சராச்சியத்தில் மகிமையுடன் வீற்றிருப்பாய்.

## எங்கள்வீட்டில் நடந்தது

பாடசாலையிலிருந்து வீடுவந்தபிள்ளையிடம் அன்னை அன்றைய நிகழ்ச்சிகள் பற்றி வினவினாள்.

நாங்கள் ஓய்வுநேரத்தில் கலியாணவீடு வைத்து விளையாடினோம்என விடையிறுத்தாள் சின்னயசிந்தா. அதைப்பற்றிப் பிரமாதமாகக் கூறவும் ஆரம்பித்துவிட்டாள்.

நான்தான் மணமகள். அடுத்தவீட்டு நிர்மலா பெண்ணின் தோழி. எதிர்வீட்டு சோதி வேல்பிடிப்பவள். அன்ரனியம்மா சுவாமியார் எனக்கூறினாள் யசிந்தா.

சரி, மாப்பிள்ளை யார்என அன்னை கேட்டாள்.

ஓ அம்மா, இதுஒரு சின்னக் கலியாணம்தானே. மாப்பிள்ளை தேவையில்லையென நாங்கள்முன்பே முடிவுசெய்துவிட்டோம்எனப்பதிலளித்தாள் சின்னயசிந்தா.

## இருதயங்களின் பிரகாசமே...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரிந்துபோன மைந்தர்களுக்கு ஞானஒளியீந்து அவர்கள் உம் ஏவுதல்களுக்குப் பணியவும், சத்தியத்தின் நீழலில் இளைப்பாறவும் கிருபைசெய்தருளும். பரமதேவனின் கருணை பரிபூரணமாகநிறைவேறி, அகிலஉலக மக்களும், குறிப்பாக எல்லாக் கிறிஸ்தவமக்களும் திருச்சபையின் ஒருமைப்பாட்டில் ஒன்றுகூடி ஒரேகுடும்பமாகி உம்மைநித்தியமும் வாழ்த்த உமது ஞானக்கொடைகளைப் பொழிந்து அர்ச்சித்தருளும்.

> செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
>
> — 11-ம் பத்திநாத பாப்பரசர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், அர்ச். சின்னத்திரேசம்மாள், அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினாலும் இம்முறை நடந்த மெடிக்கல் சோதனையில் எனது மகனும் பூரணசித்தி அடைந்திருக்கிறார். எனவே, நேர்த்தியின்படி இதைப் பாதுகாவலனில் பிரசுரிக்கிறேன். இன்னும் எங்களுக்குவரும் நன்மைகளில் உதவிபுரியும்படி மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொ. எலியாஸ்பிள்ளை

● மேஜர்ஜோண் டயஸ்என்பவரது தலைமையில்சென்ற இந்தியமலையேற்ற கோஷ்டியானது உலகின் மகாஉந்நதமான எவறெஸ்ற்சிகரத்திலே 27,900 அடி உயரத்தில் தனதுஇறுதிமுகாமை அமைத்திருப்பதாகவும், மீதியான 2,000அடியையும் இரண்டொரு நாளில் ஏறமுடியுமென்பதாகவும் சென்ற1-ந்திகதியன்று புதுடில்லியிலிருந்து சமாசாரம் எட்டியுள்ளது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11122

சுன்னாகம்
சங்கரப்பிள்ளை சீனி —வழக்காளி.
எதிராக, சுன்னாகம்
1. கந்தன் பூதனும்
2. பெண் சின்னாச்சியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11122-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ஆம் ஆனிமீ 30-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,282. 14-5-54 தொடக்கம், 17-9-54 வரைக்கும் ரூபா 750-க்கு 8%வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும். இதில் ரூபா 400 கொடுபட்டிருக்கிறது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோயிற்பற்று, சூராவத்தை "சந்திரன்புலமும், கிணத்தடியும்" பர. நில. இலா. மூன்றும் (ப. நி. இ. 3), வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — கந்தன் பெண் நாகியின் ஆதனமும், நாகன் பெண் பொன்னிக்கும், பங்காளருக்கும் உரியஆதனமும். வடக்கு— வைரவன் மாதனும், பெண் பொன்னியின் ஆதனமும். மேற்கு — வடக்கு — எல்லையில் கூறிய ஆதனத்தின் எஞ்சியஆதனமும். தெற்கு — வேலன்பெண் சின்னியின் ஆதனமும், வைரமுத்து பெண் சிவபாக்கியத்தின் ஆதனமும். இவையாவும் கிழக்குப்பகுதியிலிருக்கும் (பர. நி. இலா. 12—0) பன்னிரண்டுபரப்பைச் சேர்ந்தவை. இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் H 151/261-இல் பதிவுசெய்யப் பட்டிருக்கிறது.

செ. விசாகரத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
நம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
30-5-62

## பேசும் பேனா

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் விடையை அஞ்சல் அட்டையில் எழுதி எமக்கனுப்பிவைக்கலாம்.

### வேண்டாம் பல்கலைக்கழகப்படிப்பு

இப்படிப்பிடிவாதமாகக் கூறினாள் அச்சிறுமி ஏன்? மேலும் தன்னால் கற்பதற்கு இயலாதென்றா? அல்லது அதற்காய செலவுக்கு வகையற்றதாலா? இல்லை.

அந்த நங்கையின் தந்தை பிரபல பணக்காரர். தனது மூத்த புதல்வியிடம் அளவுகடந்த அன்பு அவருக்கு. இயற்கையழகு நிறைந்து எழிலுடன் நிகழ்ந்த தம செல்விக்கு செயற்கையழகையும் சேர்த்து மகிழ்வார். படிப்பில் வெகு சூடிகை அவள். எனவே ஒவ்வொரு வகுப்பிலும் அவள் பெற்ற பரிசுகட்கும் பதக்கங்கட்கும் அளவில்லை. கலாசாலைக் கல்விமுடிந்தது. பல்கலைக் கழகக் கல்வியைத் தெரிந்துகொள் எனக்கூறினார் தந்தை. தன்புதல்விக்காக எதையுமே செய்யத் தயாராயிருந்தார் அவர். ஆயின் அவள் மறுத்தாள்.

தந்தையின் மனதில் பேரிடி விழத்தகும் செய்தியொன்றைக் கூறினாள். அந்தச்செய்தி யாது? நான் கன்னியர் மடத்தில் சேரஆசிக்கிறேன்.

செல்வத்தில் பிறந்து செல்வாக்காக வளர்ந்தும் தன் கன்னிமையை இறைவனுக்கர்ப்பணித்துத் தியாகவாழ்வு நடாத்திய புனிதை ஜெம்மா கல்கானி தான் அச்சிறுமி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3840

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

The Valigamam East Co-operative Agricultural and Production and Sales Society now called The Averangal Multi-Purpose Co-operative Society Ltd. — வழக்காளி.

எதிராக, புத்தூர் கிழக்கு
அருணாசலம்
கனகசபாபதி முத்துக்குமாரசாமி
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3840-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம் ஆண்டு ஆடிமாதம் 28ந்-திகதி சனிக்கிழமை (28-7-1962) பிற்பகல் 2மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,436. 21-1-61 தொடக்கம் 31-8-61 வரைக்கும் ரூபா 1,200-க்கு 4%வட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும். இதில் ஏற்பட்டசெலவு ரூபா 115-80சதம். வெலியாத்துச்செலவு 32 ரூபா 32சதம். வரும் செலவு 23ரூபா. இதில் 425ரூபா கழிவு.

### ஆதன அடர்பு

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் புத்தூர்கோயிற்பற்று, புத்தூர் இறை "பறையன்இருப்பு தோட்டநிலம்" என்னும்காணி நில பர. 31¾. எல்லை: கிழக்கு — மளவராசு கந்தையா கைம்பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு — சரவணமுத்து கந்தையாவுக்கும், மற்றவருக்கும் உரியஆதனம். மேற்கு — சுப்பர் ஆசைப்பிள்ளையின் ஆதனமும், தெற்கு— வேலன் பெரியனின் ஆதனமும் உண்டு. பதிவு இலக்கம் K 193/123.

இ. கனகரத்தினம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைரோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த தோத்திரம்

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராகிய அர்ச். யூதாததேயுவின் வேண்டுதலால் நான் விண்ணப்பித்ததின்படி என் மாற்றம் ரத்துச்செய்யப்பட்டது.

சென்ற புரட்டாதித் திங்கள் எனது இலாகாவில் என்னை இன்னோரிடத்திற்கு மாற்றினார்கள். இதனால் எனக்கும் என் குடும்பத்திற்கும் நேரிடவிருந்த இடைஞ்சல்கள் பல. இதையிட்டு மிகவும் மனம் கலங்கினேன். தேற்றுதீவில் புதிதாக அமைத்த அர்ச். யூதாததேயுவின் சேத்திரத்தில் வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறும் நவநாட்களில், மழையையும், காற்றையும்பாராது, போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதமானபோதும் நானும் என்குடும்பமும்சென்றுபங்குபற்றி என்னை மாற்றமில்லாமல் இருந்தஇடத்திலேயே விடும்படி மன்றாடி, எனது இலாகாதலைவருக்கு மனுச்செய்தேன். என்மன்றாட்டுக் கேட்கப்பட்டது. மாற்றம் ரத்துச்செய்யப்பட்டது இன்னும் என்மனைவிக்குத் தோன்றிய நோய்கள்யாவும்தீர்ந்து, வேண்டியபடி சுகமான பிரசவமும் ஆயிற்று. அர்ச். யூதாததேயுவின்நாமம் என்றும் புகழப்படுவதாக.

நன்றியறிதலாய் இதைப் பிரசுரிப்பதுமன்றி அவரின் புதியசேத்திரத்தில் ஓர் சற்பிரசாத ஆசீர்வாதமும் 11-5-62-ல் வைப்பித்தேன்.

"யூதாததேயு நாமத்தோனே
யேசுதேவனின் சீஷனே
கூடிநாம்உம்மை வாழ்த்தினோமே
தேவசீரைத் தாருமே."

Nicho

● இவ்வாண்டின் தபசுகாலத்திலே பின்தங்கிய நாடுகளுக்கு உதவியாக ஜேர்மனியமேற்றிராணிமார் 37இலட்சத்து 50ஆயிரம்பவுண் சேகரித்திருக்கிறார்கள். 1959-ம்ஆண்டுமுதல் இதுவரை இந்தஉதவிக்கென்று அவர்கள் மொத்தமாகச் சேகரித்துள்ள பணம் 1கோடியே45இலட்சம்பவுண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

## கல்வாரியின் உபகரணங்கள்

அண்மையில் வெளிநாட்டு நண்பரொருவர் கல்வாரியின் உபகரணங்கள் என்ற தலைப்பில் உலகஇரட்சகரின் திருப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள்பற்றிய தகவல்களடங்கிய சிறு நூலொன்றை அனுப்பியுள்ளார். இதிலிருந்து கிறீஸ்துநாதரைத் திருச்சிலுவையுடன் சேர்த்து அறைய உதவிய திரு ஆணிகள்பற்றிய தகவல்களைத் தாவிரும்புகிறேன். மற்றைய உபகாணங்கள்பற்றியும் பின்னர் வெளியிடப்படும்.

## திரு ஆணிகள்

கிறீஸ்து அறையுண்ட உண்மையான திருச்சிலுவையையும் மற்றைய உபகரணங்களையும் கண்டு பிடிப்பதற்காகப் பலவருடங்களாக முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆயின் இத்துறையில் வெற்றியீட்டியவள் சக்கரவர்த்தி கொன்ஸ்தந்தீனின் அன்னையான புனிதை கெலனுவே. திருச்சிலுவை கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியிலிருந்தே மூன்று திரு ஆணிகளும் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுளொன்றை ஜெர்மானியிலுள்ள ரியர் நகர் மேற்றிராணியாரான அக்கிறிற்றுஸ் என்பவருக்குப் புனிதை கெலன் அன்பளிப்பாக வழங்கினுள். ஆசனக்கோவிலில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட இத்திருப்பண்டத்தை வணங்குவோருக்கென 3-ம் செலஸ்ரின் பாப்புவால் விசேட பலன்கள் அருளப்பட்டன. பதினும் நூற்றுண்டிலேற்பட்ட அரசியற்புரட்சிகளையும், கலகங்களையுமொட்டி இத்திருப்பண்டம் இரகசிய அறையில் பாதுகாக்கப்பட்டது. மீண்டும் 1810-ல் ரியர் நகர மகாலயத்தில் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்பட்டு இன்றளவும் அங்கு பாதுகாக்கப்பட்டுவருகிறது.

## இத்தாலியில்

தனது புதல்வனின் ஆட்சிக்கு எந்தவித எதிர்ப்பும் இருக்கக்கூடாதெனக் கருதிய கெலனு சக்கரவர்த்திகள் முடிசூடுவதற்கென உபயோகிக்கும் இருமபாலாய மகுடத்தின் முன்றிலில் இரண்டாவதாணியைப் பொருத்தச் செய்தாள். பல சக்கரவர்த்திகளாலும் அணியப்பட்ட இம்மகுடம் மொறீஸ் சக்கரவர்த்தியால் பின்னர் பெரிய கிரகோரியார் என அழைக்கப்பட்ட கிரகோரி மேற்றிராணியாருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கிரகோரியார் பாப்புவானதும் லொம்பாடியின் அரசர்கட்கு இம்மகுடத்தை அளித்தார். பரிசுத்தரோமைச் சக்கரவர்த்திகள் முடி சூடவும் இம்மகுடம் உபயோகிக்கப்பட்டது. ஈற்றில் இரண்டாவது விக்ரர்இம்மானுவல் அரசருக்கு சக்கரவர்த்தி பேடினன்ட் யோசவ் இத்திருப்பண்டமடங்கிய முடியை அனுப்பிவைத்தார். அன்றிலிருந்து இத்தாலியிலுள்ள மொன்ஜா நகரின் ஆலயமொன்றில் பூச்சியமாகப் பாதுகாக்கப்படுகின்றது.

## கடிவாளத்தில்

தனது புதல்வனில் அணைகடந்த அன்புபாராட்டிய புனிதை கெலனு சக்கரவர்த்தி சவாரிசெய்யும் குதிரையால் அவருக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாதிருக்க எண்ணி மூன்றுவது திரு ஆணியை இரு துண்டுகளாக்கிக் குதிரைக்கடிவாளத்துடன் அவற்றை இணைக்கச் செய்தாள். இச்செயல் திருப்பண்டமொன்றுக்கு ஓரளவு அவமானத்தையளித்ததெனினும் அக்காலத்தில் சக்கரவர்த்திகட்கு திருச்சபையில் அதிக செல்வாக்கிருந்தமையாலும், திருப்பண்டங்களைக் கண்டுபிடிப்பதில் ஏராளமான பணத்தை வாரியிறைத்தும், பலமாதகாலம் தானேபிரயாசைகள்மத்தியில் தலைமை வகித்தும் முயற்சிசெய்த கெலனுவுக்கு மனவருத்தமுண்டுபண்ண விரும்பாமையாலும் எதுவித எதிர்ப்பும் காட்டப்படவில்லை. எனினும் இத்திருப்பண்டத்துக்கு உரிய மரியாதையளிக்கப்படல் வேண்டுமென்னும் இயக்கம் வலுவடைந்துகொண்டே சென்றது. சில வருடங்கட்குப்பின்னர் கடிவாளத்திலிருந்த பரிசுத்த துண்டுகள் அகற்றப்பட்டு ஆலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. ஐந்தாவது சிலுவைப்படையெழுச்சியின்போது பாதுகாப்பையொட்டி இரகசியமாகப் பிரான்ஸ்தேசத்திற்கு அனுப்பிவைத்தனர். பின்னர் பிரான்சிய அரசியற்புரட்சியின்போது இத்திருப்பண்டத்தை அழிக்க விசேட சதித்திட்டம் ஒன்று இயங்கியமையால் அரசினர் நூதனசாலைக்கு எடுத்துச் சென்று பாதுகாக்கப்பட்டது. இருவருடங்களின்பின்னர் முன்போல பிரான்சின் தென்பகுதியிலுள்ள கார்ப்பென்றல் என்னுமிடத்துக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு பூச்சியமாகப்பாதுகாக்கப்பட்டுவருகின்றது.

## நகைச்சுவை

சரித்திர வகுப்பில் வருடம் மாதமாகப்பிரிக்கப்பட்ட வரலாற்றைப் போதித்தபின் ஆசிரியர் வினவினுர். ஒரு வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாக வகுத்தவர் யார்?

வாடகை வீட்டில் குடியிருக்கும் யோண் கூறினுன். வாடகை வீட்டின் சொந்தக்காரராயிருக்க வேண்டும். ஏனெனில், ஒரு வருடத்தில் பன்னிரு முறைகள் வாடகை வாங்கலாமல்லவா?

## சைக்கிள் சவாரி

மாட்டுச்சவாரிபற்றிப் பேசும்பேனு குறிப்பிட்ட சில வாரங்கட்குள் சைக்கிள் சவாரியொன்றைப்பற்றிய அறிவித்தல்களும் வெளியாகிப்பிரமாதப்படுகின்றன. தினகரன் நாளிதழ் நடாத்தும் இப்பிரமாண்டமான போட்டியில் முந்திய தடவைகளில் பல கத்தோலிக்க இளைஞர்கள் பரிசுகளைப்பெற்றுள்ளார்கள். இம்முறையும் தங்கள் திறமையைப் பல கத்தோலிக்க இளைஞர்கள் நிருபிப்பர்எனக் காத்திருக்கலாமல்லவா?

## திரைப்பட விமர்சனம்

நல்ல திரைப்படங்கள்பற்றிய செய்திகளை வெளியிடுவதைப் பலர் வரவேற்றிருக்கின்றனர். கத்தோலிக்க திரைப்படங்கள் அல்லது சன்மார்க்கத்துக்குப் பாதகமில்லாத திரைப்படங்கள் வெளிவரும்போது இவ்விதம் சில குறிப்புகளை தொடர்ந்து வெளியிடுதல் வேண்டுமெனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். எம்மாலியன்றவரை இவ்விதம் செய்ய முயலுவோம்.

ஒரு நண்பர் குற்றச்சாட்டொன்றைச் சுமத்தினுர். யாழ்நகரில் சென்றவாரம் திரையிடப்பட்ட அசிசியின் புனிதர் பிரான்சிஸ் பேசும்படத்தைப் பற்றிப் பேசும்பேனு எதுவும் கூறவில்லையென்பது அவர் வாதம். இத்திரைப்படத்தைப்பற்றிச் சிலமாதங்கட்கு முன்னர் பாதுகாவலனில் உல்லாசவேளைப்பகுதியிலும், செய்திப்பகுதிகளிலும் விசேட செய்திகள் வெளியாகியுள்ளன. எனவே பேசும்பேனு பகுதியில் மீண்டும் பிரசுரிக்கவில்லையென நண்பருக்கு விளக்கினேன். ஏற்றுக்கொண்டார் நண்பர்.

## பிரமுகர் யார்?

சென்றவாரம் எம்மால் பிரசுரிக்கப்பட்ட பிரமுகர் யார் என்ற வினுவுக்கான சரியான விடை அடுத்தவாரம் பிரசுரமாகும். அதற்குள் நேயர்கள்

[7-ம் பக்கம் பார்க்க]

சிறு கதை

## புளி

"இப்போது புளிக்கு என்ன செய்கிறீர்?"

"அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை; என்மனைவியே அந்தப்பொறுப்பைக் கவனிக்கிறுள்" என்றுர் குமார்.

"பழைய இருப்பு இன்னும் முடியவில்லைப்போலும்" என்று கூறிவிட்டுச் சிரித்தேன் நான்.

"ஏதோ மாங்காய், எலுமிச்சங்காய் என்று போட்டு விஷயத்தை முடித்துவைக்கிறுள்; அவ்வளவுதான்! ஏன்? பெரியகடை பத்திமா ஸ்டோரில் சகாயமான விலைக்குப் புளி எடுக்கலாமென்றுர்களே!"

"ஒருவேளை அங்கே பேரீச்சம்பழம் புளியாக உருமாறியிருக்கும்" என்று என்நம்பிக்கையீனத்தைக் காட்டினேன்.

"அங்காடிக் கடைகளில் அப்படிச் செய்வார்கள். பத்திமா ஸ்டோரில் அப்படி ஒருபோதும் ஏமாற்றமாட்டார்கள்" என்று குமார் கூறியபோது அக்கடையைப்பற்றிய பெருமதிப்பு அவருள்ளத்தில் இருந்ததை அறிந்துகொண்டேன்.

* * *

பஸ், சித்தங்கேணியால் திரும்பியது. நானும் குமாரும் பஸ்இல் கடைசி ஆசனத்தில் இருந்தோம்.

"குமார்! பண்டைத்தெருப்புச் சந்தியில் கழுத்தில்வரவணிக்கம் கட்டியபடி ஏறினுனே ஒரு ஆசாமி! உனக்குத் தெரியுமா?" என்று குமாருவைச் சுரண்டிக் கேட்டேன்.

"ஆமாம்; எங்கேயோ பார்த்தஞாபகம்" என்றுர் குமார்.

"பத்திமா ஸ்டோர் மனேஜர்தான் அவன். இந்த பஸ்இல் முன்'சீற்'றில் உட்கார்ந்திருக்கிறுன். ஆள் பெரிய ஆசாமி."

"என்ன நடந்தது?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் குமார்.

"நிதானமான விலைக்கு அங்கே புளி வேண்டலாம் என்றுயே! நேற்று ஒரு 'கம்மாரிசு' அடித்துவிட்டான்."

"மெல்லச் சொல்லு" என்று காதை என்வாயருகில் கொண்டுவந்தான் குமார்.

"அரை றுத்தல் புளிஎன்று சொல்லிவிட்டு ஒரு2ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். புளியும், றிசீற்றும், அதற்குள் மிச்சக் காசும் இருந்தது.

"மிச்சம் எவ்வளவு?"

"50சதம். ஒன்றரை ரூபாய்க்கு அரை றுத்தல் புளி!"

குமார் முகம் பேயறைந்தது போலிருந்தது. சிறிதுநேரம் சங்கானைப்பக்கத்துப் பனைகளைப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சுவிட்டான். அந்தக் கடையைப்பற்றிப் புகார் கூறுவதை அவன் விரும்பவில்லை என்று தெரிந்துகொண்டேன்.

"புளி றுத்தல் என்ன விலை என்று நீ கேட்கவில்லையா?" என்று மீளவும் பேச்சை ஆரம்பித்தான்.

"இல்லை; அதுதான் மோசடிசெய்தான்."

"றிசீற்றில் என்னவிலை போட்டிருந்தார்கள்?

"50சதம் என்று."

"நீ ஏன் மிச்சக் காசைக் கேட்கவில்லை?"

"சிறிது தூரம் வந்துதான் றிசீற்றைப் பிரித்துப் பார்த்தேன்."

"திரும்பிப் போய்க் கேட்டிருக்கலாமே!"

"ஒரு ரூபாய்க் காசுக்காகப் பெரிய கடையில் ஒரு அவமானத்தைத்தேடி மூட்டைகட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை." குமார் "உன்னிலேதான் தவறு" என்றுவிட்டு ஏதோ ஒரு பழைய பத்திரிகையை வாசிக்க ஆரம்பித்தான்.

அன்று சாயந்திரம் பத்திமா கடையருகால் வரநேர்ந்தது. ஒருகிழவி கடையில் வாக்குவாதப் பட்டாள்.

"எட மோனே, ஒரு இருபத்தைந்து சதக்குத்தியும், 2 பத்துச் சதக்குத்தியும், ஒரு ஐந்துசதமும் தந்துதானே புளி கேட்டேன்" என்று அறுத்துறுத்துக் கிழவி விளக்கம் கொடுத்தாள்.

மனேஜர் வந்தார்.

"ஆச்சி அண, நீ எவ்வளவு காசு கொண்டுவந்தாய்?"

"ஏனடா தம்பி! புல்லுவித்த காசு 3றாவாவில்,பாக்கு, வெத்தில, போயில, எல்லாம் 40 சதம் போக 2 றாவா 60 சதம் கொண்டந்தனே!"

"சரி. நீ வைத்திருக்கிற காசை முதலிலே எண்ணிப்பார்."

கிழவி சேலை முடிச்சை அவிழ்த்து எண்ணினுள்.

பிராணன் இழக்கும் நிலையிலிருந்த இரண்டு ஒற்றை ரூபாய்த்தாள்கள் மடிப்பு நிமிர்ந்து மூச்சுவிட்டன.

அவற்றோடு ஒரு பத்துச் சதமும் இருந்தது. ஆகையால் புளிக்கு 50 சதம் கொடுத்து விட்டாள் என்பது நிச்சயமாயிற்று.

"ஆசாமி கையும் மெய்யுமாய்ப்பிடிபட்டான்" என்றேன் குமாருவைப் பார்த்து.

இந்த வேடிக்கையைப்பார்க்க 2, 3, 5, 10 என்று 20 பேர் வரையில் சேர்ந்து விட்டார்கள். கிழவியின் கையில் ஒரு பனை யோலைப் பெட்டி— அடுக்குப்பெட்டி இருந்தது.

பெட்டிக்குள் இருந்த வெற்றிலைக் கட்டைப் பார்த்தபடியே...

"இதையும் கொஞ்சம் தூக்கு" என்றுன் மனேஜர்.

பெட்டிக்குள்ளிருந்த வெற்றிலையைக் கிளப்பக் கலீர் என்று 50 சதம் அதாவது ஒரு 25 சதம் 2 பத்துச்சதம் ஒரு 5 சதம் தலையை நிமிர்த்தியது. கிழவி, வாய்க்குள் இருந்த ஒற்றைப் பல்லைக் காட்டி "என்னிலே தாண்டா மோனே பிழை" என்று ஒத்துக் கொண்டாள்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. கிழவியைக் கவனித்துக் கொண்டேயிருந்த ஒரு நவ நாகரிகப் பெண் "சுத்த கொன் சென்ஸ்" என்று விட்டுப் போனுள்.

மனேஜர் என்னைக் கூர்ந்து பார்த்தார்.

"ஐயா, மன்னிக்கவேண்டும் நேற்று அரைறுத்தல் புளி வேண்டியது நீங்கள் தானே!"

"ஆமாம் நான் தான்."

"எவ்வளவு கொடுத்தீர்கள்?"

"2 ரூபா."

"அதில் தவறு நேரிட்டுவிட்டது. 1 ரூபா 50 சதம் மீதி கொடுப்பதற்காக 50 சதம் கொடுத்துவிட்டோம். நேற்றிரவு கடைக்கணக்குப் பார்த்தபோது 1 ரூபா மேலதிகமாயிருந்தது" என்று அவசரமாகச் சொல்லிவிட்டு ஒரு ரூபாய்க் காசை எடுத்து என் கையில் வைத்தார்.

"நிதானவிலை பத்திமா கடையில் என்று என்வாய் முணுமுணுத்தது. குமார் சிரித்துக்கொண்டே வாபோகலாம்" என்று கையைப்பிடித்து இழுத்தான்.

(யாவும் கற்பனை)

"அமுது"

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday June 10-1962

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org